[illegible]

[illegible]

4

ஏப்ரல், 1929

7L
Y31m2,N26
N29.4.4
199381

1134

No. 2169. Vol. IV.—

JUN 1929 MADRAS

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்
ஆபீஸ் : 9, ப்ராடிஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV] எப்ரல் 1929 [நெ 4

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
| --- | --- | --- |
| 26. | இந்திய பாமரஜனங்களின் நிமித்தம் கல்வி போதனை விஷயம் | 71 |
| 27. | கிராமாந்தர ஜல சௌகரிய நிலை | 73 |
| 26. | ஸஹாயத் தொழிலபிவிருத்தி குறிப்பு | 77 |
| 29. | விவசாயக் குறிப்பு | 78 |
| 30. | சென்னையில் விவசாய முன்னேற்ற முயற்சிகள் | 80 |
| 31. | கிராமங்களை சீர்திருத்த சில யோசனைகள் | 83 |
| 32. | இந்திய தேசத்திலுள்ள மாடுகள் | 86 |
| 33 | செடி வர்க்கங்களின் விஷயங்கள் | 88 |
| 34. | வர்த்தமானக் குறிப்பு | 91 |


**Annual Subscription (inclusive of Postage)**
**Inland Rs. 3 : Foreign Rs 4—8.**
**Single copy, Inland As 6 : Foreign As 8.**

Rural India reaches the Villages and Towns of India
It is the best medium for advertisement.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம்பொடி



காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்டு பாக்ஸ் 140, மதுரை.**

80 வருஷக்காலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சொல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப் ரோல் வாடை, அசல் பசும்நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இசையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனி சிலாவது ஏமாந்துபோகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலை சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் நாள் முழுதும் சுகந்தமாய் இருக்கும்.

| | விலை | தபால் கூலி | பாக்கிங் | தொகை |
|---|---|---|---|---|
| 3 புட்டி | 0 9 0 | 0 4 0 | 0 1 0 | 0 14 0 |
| 6 புட்டி | 1 2 0 | 0 5 0 | 0 1 0 | 1 8 0 |
| 12 புட்டி | 2 4 0 | 0 8 0 | 0 1 0 | 2 13 0 |



# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டிகலெக்டர்

ஆபீஸ்: 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV] எப்பிரல் 1929 [நெ 4


## இந்திய பஹுஜன ஜனங்களின் நிமித்தம் கல்வி போதனைவிஷயம்.

*மிஸ்டர் எஸ். வி. ராமமூர்த்தி எம். ஏ., ஐ. ஸி. எஸ்., அவர்களின் உபந்யாஸம்.*

நம்முடைய தேசம் விவேகவழியில் செல்கின்றது. பஹுஜன ஜனங்களை அவ்வழியைக் கைப்பற்றும்படி செய்வது கல்வி போதனை தான்.

தற்போதில் பஹுஜன ஜனக்கல்வி என்பது சிறு ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் தான் கொடுக்கப்படுகிறது. அது ஆண்மக்களுள் வயது வந்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதே இல்லை. நம்முடைய தேசத்தில் ஆண்மக்களுள் 100இல் 90 பெயர்கள் எழுத்துவாசனையில்லாதவர்கள். சிறு பிள்ளைகளுள் கூட 100இல் 35 பெயர்கள் தான் பள்ளிகூடங்களில் படிக்கிறார்கள். இச்சிறுபிள்ளைகளும் 10 வயதுக்குள்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களும் கல்வியை சரியாய் அடைகிறதில்லை. பள்ளிக்கூடத்தில் சேர்ந்த பிறகு இரண்டு, மூன்று வருஷங்களான வுடனேயே அவர்கள் பள்ளிக்கூடங்களிற்குப்போவது நிறுத்தப்படுகிறது. ஆரம்பப்படிப்பில் ஐந்து வகுப்பு போதனைகளையும் பூர்த்திசெய்கிற சிறுவர்களின் சங்கியை பள்ளிக்கூடத்தில் கல்விபோதனைகளை யடையும் சிறுவர்களின் சங்கியையில் 100இல் 15 தான்.

சிறுவர்கள் பள்ளிக்கூடங்களை விட்டபின்பு படிப்பில்லாத தாய் தந்தையர்களின் ஸஹவாஸத்தில் இருப்பதால் அவர்கள் அடைந்த படிப்பையும் சீக்கிரத்தில் இழக்கிறார்கள். ஆகையால், வயதுவந்தவர்களுக்கும் கல்வி கொடுக்கப்பட்டால் தான் சிறுவர்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியானது [illegible]போகாமல் பயன்[illegible]கூடும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் எழுதப்படிக்க வேண்டிய படிப்பை மாத்திரம்தான் போதிக்கப் படுகிறார்கள். நம்முடையதேசத்தில் அநுஷ்டிக்கப்படுகிற கல்வி முறையானது ஆரம்பப்பள்ளிக்கூடத்தில் ஆரம்பமாகி கலாசாலையில் முடிவடையவேண்டிய நோக்கத்துடன் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பப்பள்ளிக் கூடங்களிலாவது மத்திய கல்வி பள்ளிக்கூடங்களிலாவது மாணவர்கள், வாழ்வை நடத்தவேண்டிய வழியில் உபயோகப் படக்கூடிய விஷயங்களில் கல்வி போதனைகளை அடையக்கூடுகிறதில்லை. உயர்படிப்பை அப்பியஸிக்கிற, ஜனத்தொகையில் 100 இல் ஒருவனுடைய கல்வியின் நோக்கமாகவே ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றனவே யொழிய அதிககாலம் பணச்செலவுடன் படிப்பை அப்பியஸிக்க சக்தியில்லாதப் பாமரபஹுஜன ஜனங்களாகிய ஜனத்தொகையில் 100இல் 99 பெயர்கள் சீக்கிரத்தில் அவர்களின் வாழ்வுக்கு வேண்டிய கல்விபோதனைகளை அடையவேண்டுமென்கிற நோக்கத்துடன் அவைகள் நடத்தப்படவில்லை. பாமர பஹுஜன ஜனக்கல்வி யென்பது எழுதப்படிக்க வேண்டிய போதனா முறையை மாத்திரமே வஹிக்கக்கூடாது. பஹுஜன ஜனங்கள் எவ்வித முறையினால் தங்களுடைய யோக க்ஷேமங்களை நடத்தவேண்டிய வழிகளிலும், தொழில் வழிகளிலும், செல்வவிருத்தி வழிகளிலும், சுகாதார வழிகளிலும், கொஞ்ச காலத்திலேயே ஞானத்தை யடையக்கூடுமோ அதுதான் சரியான பஹுஜன ஜனக்கல்வி முறையாகும். தற்காலத்தில் ஜனப்பிரமுகர்கள் தேறுதல்களில் தாங்கள் அபேக்ஷகர்களாக ஏற்படும்பொழுது வாக்காளர்கள் தங்களுடைய யோக்கியதைப் பத்திரங்களைப் படித்தறியக்கூடியவர்களாகவும், வாக்கு நிவாரச் சீட்டுகளை எழுதக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டுமென்கிற நோக்கத்துடன் பஹுஜனஜனக்கல்வியைப் பாராட்டுவதால் அக்கல்வி முறை எழுதப்படிக்க யோக்கியதையை உண்டாக்கக்கூடிய விஷயங்களைத் தவிர வேறு விஷயங்களை உட்கொள்கிறதில்லை. ஆகையால் பிரமுகர்களும், இதரர்களும், எந்தக்கல்வி முறை பஹுஜன ஜனங்களுக்கு வாழ்வில் உபயோகப்படக்கூடிய விஷயங்களை யெல்லாம் வஹிக்குமோ அதையே பஹுஜன ஜனக்கல்வி முறையாக ஏற்படுத்த முயல வேண்டும்.

199381



ஆரம்பப்பள்ளிக் கூடங்களில் உபாத்தியாயர்கள் மாணவர்களுக்கு இந்துதேச சரித்திர சம்பவங்களைச் சொல்லி இந்தியாவின் வாழ்வின் ரஹஸ்யங்களை அவர்கள் அறியும்படிச்செய்ய வேண்டும்.

பஹுஜன ஜனக்கல்வி முறையானது சரீரப்பயிர்ச்சி விஷயங்களையும் வஹிக்கவேண்டும். பண்டைநாட்களில் போல் சரீரப்பயிர்ச்சி சங்கங்கள் கிராமங்களில் ஏற்படவேண்டும். கிராமப்பிள்ளைகள் ஒன்றுகூடி ஒரேஸ்தலத்தில் பயிர்ச்சிகளை அப்பியஸித்தால் சமூக ஒற்றுமையும் ஐக்கிய உணர்ச்சியும் உண்டாகும்.

இதுபோலவே கிராம ஜனங்கள் ஒன்றுகூடி ஜாதி மத வகுப்பு வித்தியாசங்களில்லாமல் ஒரே இடத்தில் பிரதிதினமும் காலையில் கடவுளைத்துதி செய்வதும் ஐக்கிய உணர்ச்சியை விருத்தி செய்து ஜனங்கள் நற்குணங்களையும் நல்ல நெறியையும் வஹிக்கும்படியும் செய்யும். பள்ளிக்கூடங்களில் கூட மாணவர்களை இதுபோலவே கடவுளை துதி செய்தலை யநுஷ்டிக்கும்படிச் செய்ய வேண்டும்.

கிராமத்தவர்களின் முயர்ச்சிகளில் சம்பந்தப்பட்ட முக்கிய சாஸ்திரங்களின் விஷயங்களை சுருக்கமாய் அடங்கியுள்ள ஒரு சிறிய புத்தகம் பிரசுரிக்கப்பட்டு கிராமப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் கையில் அது இருக்கவேண்டும். அதுபோலவே இந்துதேச சரித்திர சம்பவங்களை யடங்கிய புத்தகமொன்றும் அவர்களின் கையிலிருக்க வேண்டும்.

கிராமப்பள்ளிக் கூடங்களில் போதனைகள் கதைகள் பாட்டுகள் பஜனைகள், நிருபணங்கள் இவைகளின் மூலமாகச் செய்யப்பட வேண்டும்.

கிராமப்பள்ளிக் கூடங்களின் போதகர்கள் இந்திய ஜனங்களை உயர்வு விவேக நிலைக்குச்செலுத்த முயர்சிகளைக் கைக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் உற்சாகத்தையும் தேசபக்தியையும் வஹித்து அம் முயர்ச்சிகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

## கிராமாந்தரங்களில் ஜல சௌகரியமில்லை.

[கிண்டி ஸ்தாபனத்தில் விஷக்கிருமி பரிசோதகரான மிஸ்டர் டி. என். எஸ். இராகவாச்சாரியார் பி. ஏ அவர்கள் எழுதியது.]

மனிதனும் மிருகங்களும் உயிரோடிருப்பதற்கு காற்று, நீர், உணவு இம்மூன்றும் அவசியமானவை. நாம் சுகமாகயிருக்க

வேண்டுமானால் நாம் நோயில்லாமலிருக்க வேண்டும், நாம் நோயில்லாமலிருக்க வேண்டுமானால் நாம் உட்கொள்ளுகிற காற்றும், நீரும், உணவும் சுத்தமானவைகளாகவும் நோயை யுண்டாக்கக் கூடாதவைகளாகவும் இருக்கவேண்டும். அழுக்கடைந்தப் பாண்டங்களில் வைக்கப்படுகிற உணவுகளை புஜிப்பதாலும், ஜன நெருக்கமுள்ள இடங்களிலும் அசுத்தமான இடங்களிலும் வஸிப்பதாலும், நாம் நோய்களை அடைவது போலவே, அசுத்தமான ஸ்தலங்களிலிருக்கப்பட்ட நீரையும், அசுத்தபாத்திரத்திலிருக்கப்பட்ட நீரையும் உட்கொண்டால் நோய்கள் உண்டாகும்.

வாந்திபேதி, டைபாய்டு ஜுரம், சீதபேதி இவைகளையுண்டாக்கும் விஷக்கிருமிகள் நோயாளிகளின் மலங்களில் இருந்துகொண்டிருப்பது சாதாரணம். அம்மலங்களில் ஈக்கள் உட்கார்ந்து புஜித்துவிட்டு நம்முடைய ஆகாரங்களில் உட்கார்வதாலும், நோயாளிகள் மலவிஸர்ஜனம் செய்த இடத்திலுள்ள கிணற்றின் நீர் உபயோகப்படுத்தப் படுவதாலும் நோய்க்கிருமிகள் மனிதனின் சரீரத்தில் புகுகின்றன. நீரில் நோய்க்கிருமி அடையுமாகில் சீக்கிரத்தில் நோய்கள் பலரு பெயர்களை அடையக்கூடும்.

நீர் மழையிலிருந்து வருகிறது, பின்பு அது தரையில் ஓடி ஆறுகளையும் குளங்களையும் அடைகிறது. கொஞ்சம் நீர் தரையிலூறி தரைக்கு அடியில் ஓடும் ஊற்றுப்பிரவாஹங்களை யடைகிறது. மழைஜலம் தரையில் விழுவதற்குமுன் சுத்தஸ்திதியிலிருக்கிறது. தரையில் விழுந்த பின்பு மனித, மிருக மலங்களோடு சேர்ந்து ஓடுவதால் அது அசுத்தமாகிறது. கிராமங்களில் ஜனங்கள் ஜல மல விஸர்ஜனங்களை கிணறுகள் குட்டைகள் ஆறுகள், இவைகளிருக்குமிடங்களில் செய்வதோடு அவைகளிலேயே அவயவ சுத்திகளை நடத்துகிறார்கள். நோய்களையுடைய ஜனங்களால் ஜலம் அசுத்தப்பட்டு நோய்க்கிருமிகள் நோயில்லாதவர்களை அடைகின்றன. ஜனங்கள் ஆறுகளிலும் குளங்களிலும் மாடுகளை குளிப்பாட்டுகிறார்கள். சில ஊர்களில் சாக்கடை நீரும் கூட ஆறுகளில் கொட்டப்படுகின்றன: குஷ்டரோகம் முதலிய நோய்களையுடைய ஜனங்களும் அவைகளில் ஸ்நாநம் செய்கிறார்கள்.

இவ்விதமாக அசுத்தப்படுத்தப்பட்டஜலம் பானத்திற்கு உபயோகப் படுத்தப்படுகிறது. கோயில்களுக்குப் போகப்பட்டவர்கள் திருக்குளங்களில் கால் கைகளை சுத்தி செய்து கோயில்களுக்குள் புகுவது வழக்கமாயிருக்கிறது. கோயில்களுக்குப் போகிற ஜனங்களுள் தொத்து வியாதிகளையுடையவர்களுமிருக்கிறார்கள். அவர்களும் திருக்குளங்களிலேயே கால்களை சுத்திசெய்து கொள்கிறார்கள். கிராமங்களில் நோயிருப்பது இக்காரணங்களினால் தான்.



வேதங்களிலும், புராணங்களிலும், சாஸ்திரங்களிலும் ஜலத்தை அசுத்தம் செய்யக்கூடாதென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. ஜலத்தில் எச்சிலுதுப்பக்கூடா தென்றும், மல மூத்திரங்களை இடக்கூடாதென்றும், ரத்தத்தைச் சிந்தக்கூடாதென்றும், மயிர், நகம், எலும்பு, சாம்பல் இவைகளைப் போடக்கூடாதென்றும் யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனபோதிலும், வேதங்களை வாசித்த தென் தேசத்துப் பிராமணர்கள் தான் கங்கைக்குச் சமானமான காவேரி ஆற்றை மேற்சொன்ன அநுசாரவழிகளில் உபயோகப்படுத்துகிறார்கள். கிராமங்களில் வீடுகளின் புழக்கடைகளில் மாட்டுக்கொட்டில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன அவைகளினருகிலே கிணறுகளுமிருக்கின்றன. மாட்டுக் கொட்டில்களின் மூத்திரங்களும் கழிவு நீரும் தரையிலூறிக் கிணற்று ஜலத்தோடு சம்பந்தப்படுகின்றன. புழக்கடையோடுச் சம்பந்தப்படுகிற இதாளிடுகளின் சாக்கடை நீர்களும் அவ்விதமாகவே கிணற்று ஜலத்தைச் சேர்கின்றன. மேலும், கிணறுகளின் சுவர்கள் வெடிப்புகளை யுடைத்தாயிருப்பது சாதாரணமாயிருக்கிறது. அசுத்த நீர்கள் கிணறுகளிற்கு அவ்வெடிப்புகளின் மூலமாகவும் ஓடிப்போவதும் சுலபமாகிறது.

நம்முடைய வீடுகளில் ஸ்திரீகள் கிணறுகளின் கரைகளில் தான் அங்க சுத்திகளைச்செய்து கொள்கிறார்கள். அவ்விடங்களில் தான் ஜல விஸர்ஜனத்தையும் செய்து கொள்ளுகிறார்கள். தாம்புக்கயிறுகள் கிணற்றடிகளில் சேற்றோடு கலந்துகிடப்பதும் சாதாரணம். அவைகள் அந்தஸ்திதியிலேயே நீரை இழுத்துக் கொள்வதற்கு கிணற்றில் வீசப்படுகின்றன. ஜனங்கள் கிணறுகளின் நீர் பார்வைக்கு நிர்மலமாகக் காண்கிறதை நம்பி அவைகளுள் கிருமிகளில்லையென்று நினைப்பது சரியல்ல. அந்த ஜலங்களில் கோடியான கோடி விஷக்கிருமிகளிருக்கக் கூடும். நோய்கள் இம்மூலங்களாலும் உண்டாகின்றன. பட்டணங்களில் பங்களாக்களில் இன்னொரு அற்புதவேலை நடக்கிறது. அதாவது

19938

திகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் குழாயில் தோட்டக்காரன் வேலையானபிறகு வீட்டுக்குப்போவதற்குமுன் எருவிட்டகையைக் கழுவுகிறான். கீழே இருக்கப்பட்ட தொட்டியில் கழுவின நீர் விழுகிறது. பின்பு வேலைக்காரி வீட்டைப்பெருக்கின பின்பு கையை அந்தக் குழாயிலேயே கழுவுகிறாள். அந்த நீரும் தொட்டியில் விழுகிறது அதன் பிறகு சமையல்காரன் தொட்டியில் காய்கறிகளை அலம்புகிறான். பால்க்காரன் பாலுக்கு நீர் சேர்ப்பதற்கும் அக்குழாயையே உபயோகப்படுத்துகிறான். தாக சாந்தியைச்செய்து கொள்வதற்கு வீட்டு மனிதர்களும் அக்குழாய் நீரையே உட்கொளுகிறார்கள். நோய்கள் இவ்விதங்களாகவும் வீட்டு ஜனங்களுக்கு ஏற்படுகின்றன.

கிராமங்களில் ஸ்நான பானாதி உபயோகங்களுக்காக ஆறுகள் இருக்கும் பக்ஷத்தில் ஆற்றங்கறையில் ஒவ்வொருவித உபயோகத்திற்காக தனித்தனி ஸ்தலங்கள் இருக்கவேண்டும். பானத்திற்கு வேண்டிய நீரை எடுப்பதற்காக வேலிபோடப்பட்ட ஸ்தலமென்றும், ஸ்நாநத்திற்காகவென்று ஸ்தலமும, வஸ்திரங்களைத்தோய்ப்பதற்காக ஒரு ஸ்தலமும் தனித்தனியாக தூர தூரமாக ஏற்படுத்தப்படவேண்டும். ஆறுகள் நோயுள்ளவர்களாலும், துரஸ்திரிகளாலும் உபயோகப்படுத்தப்படாதபடி பாதுகாக்கப்பட வேண்டும். ஆறுகளை யுடைத்தாயில்லாத கிராமங்களில் குட்டைகள் குளங்கள் உபயோகப்பட்டால், பானத்திற் கென்று ஒரு குளமும் ஸ்நானத்திற்கென்று ஒரு குளமும் உபயோகப்படுத்தப்பட வேண்டும். அவைகள் அடுத்தாப்போல் அடுத்தாப்போல் சேர்ந்திருக்குமாகில் ஸ்நாநத்திற்கு உபயோகப்படுத்தப்பட குளத்தில் ஜலமட்டம் பானத்திற்கு உபயோகப்படுத்தப்படுவதைக்காட்டிலும் உயர்வாக இருக்கவேண்டும். ஜலமல சுத்திகளுக்காக தனிக்குளங்கள் அமைக்கப்பட வேண்டும். எப்படியானாலும், குளங்கள் ஜலமல சுத்திக்காக உபயோகிக்கப் பட்டால் தொத்து நோயுள்ள ஜனங்கள் அவைகளையுபயோகிப்பார் களானையால் நோயில்லாத ஜனங்களும்நோய்களை அடைவார்கள். ஆகவே, பிரக்ஷாளனத்திற்கு ஜனங்கள் சொம்புகளில் ஜலத்தைக்கொண்டு போய் சுத்தி செய்து கொள்வதே சரியானவழி.

கிராமங்களில் பானத்திற்குக்கிணறுகளை உபயோகிக்கப்படவேண்டியிருக்கும் பக்ஷத்தில் அவைகள் வெகு சுத்தஸ்திதியில்



வைக்கப்படவேண்டும். கிணறுகளுக்குள் கிணற்றங்கரை ஸ்தலங்களில் மழையினாலோ வேறெக்காரணங்களினாலோ ஓடும் நீர் புகக்கூடாது. சாக்கடை, மாட்டுக்கொட்டில் இவைகள் கிணறுகளிற்கு வெகு தூரத்தில் அமைக்கப்படவேண்டும். அந்நீர்கள் கிணறுகளுக்குள் ஓடிவரக் கூடாது. கிணறுகளில் அவைகள் ஊறவும் கூடாது. கிணறுகள் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கவேண்டும். கண்ட பெயர்களைச் சொம்புகளைப் போடவிடாமல் தாம்புக்கயிறுக்குக் கட்டப்பட்ட ஒரே மரக்காலையிட்டே எல்லோரும் நீரை மொண்டு தங்களுடைய சொம்புகளில் கொட்டி எடுத்துக்கொண்டு போக வேண்டும். இராட்டினங்களின் மூலமாகவே நீரை இழுக்க வேண்டும். அடிக்கடி கிணற்றில் பொட்டாசியம் பெர்மாங்கனேட்டைத் தூவி வந்தால் விஷக்கிருமிகள் நசித்துவிடும்.

எப்பொழுதும், கொதித்த நீரைப்பானம் பண்ணுவதே நலம்.

## ஸஹாயத் தொழிலபிவிருத்தி குறிப்பு

### காய் கனி வற்றல் தொழில்

நமது தேசத்தில் பட்டணங்களில் ஜனத்தொகை மேன்மேலும் அதிகமாகிக்கொண்டு வருகிறதுடன் ஜனங்களும் காய் கறி வர்க்கங்களையே பெரும்பாலும் உணவுக்கு விரும்புகிறார்கள். பட்டணங்களைச்சுற்றியுள்ளப் பிரதேசங்களில் விளையும் காய்கறிகளும் பழங்களும் பட்டணங்களுக்குப் போகின்றன. பட்டணங்களுக்கு வெகு தூரங்களிலுள்ள கிராமங்களில் விளைகிறவைகள் பட்டணங்களுக்கு வருவதற்குள் அழுகிப்போகின்றன. கிராமங்களால் அவைகள் உபயோகிக்கப் படக்கூடுகிறதில்லை. ஆகவே, பட்டணங்களில் காய் கறிகள் வேண்டிய அளவுகளில் கிடைக்காமலிருக்கும்போது கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் காய் கறிகள் அழிந்து போகின்றன.

வற்றலிடுவது நம்முடைய தேசத்தில் வழக்கமாயிருக்கிறது. ஆனபோதிலும், நம்முடைய தேசத்தியமுறை சரியானதல்ல. தெருக்களில் காய் கறிகள் நறுக்கி உலரவைக்கப்படுவதால் அவைகள் அழுக்கடைந்தும் தூசிபட்டும், மணத்தையும் குணத்தையும் இழக்கின்றன. வெயிலில் காய்வதாலும் ருசியும் குறைகிறது.

வற்றலிடுவதற்கு மேனாட்டில் ஒருயந்திரம் உபயோகப்படுத்தப்படுகிறது. அது வெகு சலபமாய் வற்றல்களை தயாரிக்கிறது. ஜர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்களில் அது உபயோகப்படுத்தப்படுகிறது. அதன் விலை 250 ரூபாய்.

நமது நாட்டில் சில ஊர்கள் காய் கறிகளை ஏராளமாய் விளைக்கின்றன. அவைகள் அவ்வூர்களின் உபயோகத்திற்கு வேண்டிய அளவுக்குப்பலமடங்கு அதிகமாக விளைந்து நஷ்டமாகின்றன. அவ்விடங்களில் ஜனங்கள் அவைகளை வற்றலிட்டு பட்டணங்களுக்கும், அந்நியநாடுகளாகிய, இந்தியர்களை அதிகமாயுள்ள, தென் ஆப்ரிக்கா, மெஸொபடோமியா போன்ற தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்து லாபங்களை அடையக்கூடும்.

நமமுடைய தேசத்திய பழதினுசுகளும் இதர தேசங்களில் கிடையாது. நம்முடைய தேசத்திலும் சிலகாலங்களில் தான் பழங்கள் அகப்படுகின்றன. ஜனங்கள் அகப்படும்பொழுது அவைகளையும் வற்றலிட்டு வைத்துக்கொண்டு ஏற்றுமதி செய்யக்கூடும். உள்நாட்டிலும் வியாபாரமும் செய்யக்கூடும்.

இதுக்ராம ஜனங்களுக்கு லாபத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல தொழில்.

## வியவஸாயக்குறிப்பு

பப்பளிச்செடி சுலபமாய் வளருகின்றது. இதை எங்கும் பார்க்கலாம். இதன் உபயோகங்களை நமது தென் இந்தியர்கள் அறியார். இதன் காய்கள் சமையல் செய்வதற்குத்தகுதியானவை. பழங்களும் வெகு இனிப்பானவை. காய்களும் பழங்களும் உடம்புக்குப் புஷ்டியைக் கொடுக்கக்கூடியவை. பழங்களை ஐரோப்பியர்கள் குருத்துவமான உணவுகளையுட்கொண்டபின்பு ஜீர்ணித்துக்கொள்வதற்காக சாப்பிடுகிறார்கள். தவிரவும் வயிற்றில் பூச்சிகளிருந்தாலும் இந்தப்பழத்தை உட்கொள்கிறார்கள்.

இதன் காய்களில் வெள்ளைப்பாலுண்டு. அதை உலர்த்தி பப்பாயின் என்ற ஓர் ஔஷதம் தயாரிக்கப்படுகிறது. இந்த ஔஷதம் ஜீர்ணத்திற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. ஒரு அவுன்ஸ பப்பாயினின் விலை 1 ரூபாயாக விருக்கிறது.



பிரஸவித்தபெண்கள் இப்பழங்களைச் சாப்பிட்டால் அவர்களுக்கு 2, 3 தினங்களிலேயே முலைப்பால் சுறக்கும். இதன் இலையை கசக்கி மார்பில் கட்டினாலும் பால் சுறக்குமாம். இதன் பாலை முகப்பருவுக்குப் போட்டால் முகப்பருவு கரைந்துவிடும், ரிங்குவர்ம் முதலிய படைகளும் போய்விடும்.

பப்ளிச்செடிகளைப் பயிர்செய்வது செலவும் கஷ்டமு மில்லாதது. அது நல்ல உணவு. நம்முடைய ஜனங்கள் அதைப்பயிர் செய்யவேண்டும். உணவுக்கும் அதன் காய்களையும் கனிகளையும் உபயோகிக்கவேண்டும். அவர்கள் பப்பாயினைச்செய்து வியாபாரமும் செய்யவும் கூடும்.

---

தூத்துக்குடியில் பஞ்சு மில்களிற்கருகில் நாகதாளி அடர்ந்து கொண்டிருந்தனவாம். மில்மானேஜர் ஆஸ்த்ரேலியாவி லிருந்து ஒரு புழுவை வரவழைத்து அதை அவைகளில் விட்டு அவைகளை அழிக்கிறாராம். அவர்கள நாகதாளிபபுதர்கள் அழிந்துகொண்டு வருகின்றனவாம்.

---

நாகதாளியை எரித்தால் 100க்கு 80 பங்கு போடாஸியம் கார்பனேட் உள்ள சாம்பல் ஏற்படுகின்றதாம்.

---

கடப்பைஜில்லா கண்டிக்கோட்டை மலையின்மேல் ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக்கிராமத்தில் மண்கிடையாது. மண் கொண்டு வருவதற்கு 6 மைல்களுக்கு அப்பால் போகவேண்டும். அவ்வளவு தூரத்திலிருந்து மண்ணைக் கொண்டுவந்து கல்ப்பிளவுகளில் போட்டுக் கிச்சிலிக்கன்களை ஜனங்கள் நட்டுவளர்க்கிறார்கள். சற்றோரங்களில் கற்கள் அடுக்கப்பட்டு மண் சரியாமல் கட்டப்படுகிறது. கிச்சிலிக்கன்களைச் சுற்றியுள்ளவரப்புகளில் வெண்டை, கத்திரி, பாவல், சேம்பு, கரணை, மஞ்சள் இவைகள் வைக்கப்படுகின்றன. உற்பத்தியாகும் காய் கறிகள் அடுத்த ஊரின் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன. மஞ்சள் பம்பாயிக்கும் சென்னைக்கும் அனுப்பப்படுகிறது

அந்த ஜில்லா வடபெண்ணை யாற்றுபடுகையில் முலாம், தர்பூசி முதலிய பழச்செடிகள் பயிராகின்றன. இவைகளுக்கு உரமிட

வெளவால் புழுக்கை 95 மைல்கள் தூரமுள்ள பங்கனபல்லியிலுள்ள ஒரு குகையிலிருந்து கொண்டுவரப்படுகிறதாம்.

அந்த ஜில்லாவில் ஊற்றுக்கிணறு அமைவது கஷ்டம், கிணறு வெட்ட 1000 ரூபாய் தேவையாயிருக்கிறது. கல்நிலம் கனகத்திற்கு ஒப்பினதென்று அந்த ஜில்லாவின் வியவஸாயிகள் கூறுகிறார்கள். அவர்களின் பிரயாசைகளோடு தென் தமிழ் தேசவியவஸாயிகளின் முயர்ச்சிகளை ஒத்துப்பாருங்கள்.

## சென்னையில் வியவஸாய முன்னேற்ற முயற்சிகள்.

[சென்னை வியவஸாய இலாகாவின் தலைவராகிய மிஸ்டர் ஆர். டி அன்ஸ்டட் ஸி. ஐ. ஈ. அவர்கள் ஸையன்ஸ் காங்கிரஸில் செய்த உபந்யாஸத்தின் ஸங்கிரஹம்.]

நம்முடைய மாஹாணத்தில் அநேகமாய் எல்லாப்பயிர்வர்க்கங்களும் விளைக்கப்படுகின்றன. ஐரோப்பிய தேசப்பயிர் வர்க்கங்களை விளைக்கக்கூடிய இடங்களும் இதர மாஹாணப்பயிர்களை விளைக்கக்கூடிய இடங்களும் நம்முடைய மாஹாணத்தில் இருக்கின்றன. கிழக்கு கடற்கரைப்பிரதேசத்தில் மூன்று பெரிய நதிகளும் அவைகளின் கிளைகளும் பாசனஞ் செய்கின்றன; மேற்குக்கரைப்பிரதேசத்தில் நதிகளும் கழிகளுமிருக்கின்றன; மத்தியப்பிரதேசத்தில் வியவஸாயத்திற்கு கிணறுகளும் குளங்களும்தான் ஜலாதாரங்கள். வடக்குப்பிரதேசத்தில் மழை சரிவர பெய்கிறதில்லை, ஆகவே அப்பிரதேசத்தில் க்ஷாமம் அடிக்கடி ஸம்பவிக்கிறது; மேற்குப்பாகத்தில் மலைத்தொடர்களும் அடர்ந்த காடுகளும் இருக்கின்றன, பூமி உயர்ந்திருக்கிறது; இப்பிரதேசத்திலுள்ள மலை காடுகளில் ஐரோப்பிய தேசப்பழச் செடிகளும் தேயிலை, காபி, ரப்பர் முதலிய செடிகளும் பயிராகின்றன.

கருப்புமண், களி, சக்கான், மணல் முதலிய எவ்வித மண்ஸ்தலங்களும் நம்முடைய மாஹாணத்திலிருக்கின்றன.

நம்முடைய மாஹாணத்தில் வியவஸாயத்திற்கு மழை அவசியமாக விருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு 20 செவியிலிருந்து 300 செவிபர்யந்தம் பற்பல விடங்களில் மழை பெய்கிறது.



நம்முடைய மாஹாணத்தில் விசேஷமாய் அநுஷ்டிக்கப்பட்ட பயிர்கள் நெல்லும் பருத்தியும்தான்; வேர்க்கடலை, தென்னை முதலிய பயிர்களுள்ள ஸ்தலங்களும் பிரபலமாயிருக்கின்றன; கரும்பும் பலவிடங்களில் பயிர் செய்யப்படுகிறது. நெல், சாகுபடிக்காகவும் விதைகளின் உற்பத்திக்காகவும் பயிர் முறை நிரூபணத்திற்காகவும் கவர்மெண்டாரால் நான்கு ஸ்தலங்களில் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன அவைகள் கோயம்புத்தூரில் ஒன்றும், ஆடுதுறையிலொன்றும், மருதேருவில் ஒன்றும், பட்டாம்பியில் ஒன்றுமாகவிருக்கின்றன. அதுபோலவே, பருத்திக்காகவும், இன்னும் இதரதானியங்களுக்காகவும் விதை உற்பத்தி ஸ்தாபனங்கள் பல விடங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தென்னை சம்பந்தமாகவும் சில அற்புத வழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வியவசாயிகள் விதைகளை உபயோகித்து திருப்தியையடைந்து வருகிறார்கள். உற்பத்திசெய்யப்பட்ட விதை வேண்டுவோர்களுக்குப் போதாமல் போகிறது. ஆகையால் கவர்மெண்டார் வியவஸாயிகளைத் தங்களுக்கு விதைகளை உற்பத்தி செய்து கொடுக்கும்படி அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்.

நெல் சாகுபடி சம்பந்தமாகவும், பருத்திசாகுபடி சம்பந்தமாகவும் அநேக திறமான முறைகள் நம்முடைய மாஹாணத்தில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரும்பு கலப்பைகளை ஜனங்கள் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 10,000 இரும்பு கலப்பைகள் நம்முடைய மாஹாணத்திலிருக்கின்றன. ஆனபோதிலும், இக்கலப்பைகளின் விலைகள் அதிகமாகவிருப்பதாலும், அவைகளை உபயோகிப்பதற்கு வேண்டியமட்டில் நல்ல மாடுகள் நம்முடைய மாஹாணத்தில் இல்லாமையாலும் அக்கலப்பைகள் அதிகமாகத்தருவிக்கப் படுகிறதில்லை இரும்புகலப்பைகளையும் மோட்டுவகைக் கரும்பு ஆலைகளையும் வரவழித்து உபயோகிக்க வேண்டுமானால் மாடுகள் இன்னும் அதிகமாக வேண்டும். மாடுகள் அதிகமானால் அவைகளின் போஷணை வஸ்துக்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும்.

நவீன விவஸாய முறைகள் கைக்கொள்ளப்படுவதாலும், அதிக உற்பத்தியை உண்டாக்கக் கூடிய விதைகள் உபயோகப்படுத்தப்படுவ

தாலும் பூமியின் சாரம் அதிகமாக கிரஹிக்கப்பட்டு வருகிறது ஆதலால், மேல் மேலும் பாஸ்பாரஸையும் நைட்ரொஜனையும் வஹிக்கிற எருக்கள் பூமிக்கு போடப்பட்டுவர வேண்டும். இல்லாவிட்டால் பூமியானது நாளாவட்டத்தில் சாகுபடிக்கே லாயக்காயில்லாமல் போய்விடும்.

சாணி, தழை எரு வேண்டியமட்டும் கிடைக்கிறது துர்லபமாய்க் கொண்டு வருகிறபடியால் ஸல்பேட் ஆப் அம்மோனியா போன்ற கலப்பு எருவையும் கூட உபயோகிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும், இவ்விரண்டுவித எருக்களும் கூடக்கூட உபயோகிக்கப்பட்டால் விளைச்சல் அதிகமாகுமென்பதும் உண்மைதான். ஸல்பேட் ஆப் அம்மோனியாவும் இதர ரஸாயன எருக்களும் ஏராளமாய்க்குறைந்த விலைகளுக்குக் கிடைக்கின்றன. மேலும், விவஸாயிகள் தழை எருவோடு ரஸாயன எருக்களை உபயோகிப்பதால் உண்டாகும் பயன்களை உணர்ந்தவர்களாய் ரஸாயன எருக்களை மேல் மேலும் வாங்கி உபயோகித்து வருகிறார்கள். இவ்வாறு ரஸாயன எருக்கள் அதிகமாக விவஸாயிகளால் வாங்கப்பட்டு வருவதைக்கண்டு மோசமான வியாபாரிகள் அநேகவித ரஸாயன எருவிலுசுகளை விவஸாயிகளுக்குப் பிரகடனம் செய்துவருகிறார்கள். இவைகளைப் பரிக்ஷித்து அவைகளின் குணவிசேஷங்களை அறிந்து விவஸாயிகளுக்குப்போதனை செய்ய வேண்டிய நிமித்தம் கவர்மெண்டார் ஒரு பரீக்ஷண ஸ்தாபனத்தை ஏற்படுத்தப் போகிறார்கள்.

சாணி தழை எருவில்லாமலே ரஸாயன எருக்களையே உபயோகிப்பது தப்பான முறை. சாணி, தழை, எரு உபயோகப்படுத்தப்படாத நிலத்தில் விளைந்த நெல் விரை குண விசேஷத்தில் குறைந்து போகிறது. தவிரவும், அதில் விளைந்த தான்யங்களும் உணவு குணங்களில் குறைந்து போகின்றன. ஆகையால் பயிர் நிலங்களுக்கு சாணி எருவானது கட்டாயமாய் உபயோகிக்கப்பட வேண்டும். சாணிஎரு வேண்டிய மட்டில் அகப்படாமல் போகிறபடியால், கவர்மெண்டார் மேற்கூறிய பரீக்ஷண ஸ்தாபனத்தில் சாணிஎருவைப்போன்ற ஒரு கலப்புஎருவை நாகதாளி, வைக்கோல், நாணல், பூண்டுகள், மணிலாக்கொட்டை ஓடுகள் இவைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்போகிறார்களாம்.



தென்னையானது காப்பு, வண்டு, மறவட்டை முதலிய பூச்சிகளால் தாக்கப்படுகிறது. இப்பூச்சிகளை அழிக்கிறதற்காக விவஸாய இலாகாவானது முறைகளைக் கண்டுபிடிக்க முயர்ச்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. பழங்களிற்கும், குருத்துகளுக்கும் வரும் நோய்களைத்தாக்க பலவித முறைகளை விவஸாய இலாகாவானது கண்டுபிடித்திருக்கிறது.

விவஸாய இலாகாவானது விவ்வஸாயிகளுக்கு பயிர்களின் சம்பந்தமாய் நிரூபணங்களைக் காட்டிப்போதனைச் செய்து வருகிறது. நிரூபகர்கள் உற்சவகாலங்களிலும் சந்தைகளின் பொழுதும் பல ஊர்களில் ஆஜராயிருந்து போதனைகளை நடத்துகிறார்கள். நிரூபண மோடார் வண்டியும் செல்கிறது. ஸினிமா விளக்குக்காக்ஷிகளும நடத்தப்படுகின்றன.

## கிராமங்களை சேர்த்தியாக்க சில யோசனைகள்.

[ஆசிரியர் என்.ஜி. ரங்கா, பி. லிட், அவர்கள் எழுதியது.]

கிராமங்களைச்சரியான, செல்வ வழியில் அமைப்பதற்காக எவ்விதங்களில் முயர்ச்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டுமென்பதை கவனித்தறிய வேண்டிய நிமித்தம் நம்முடைய மாஹாணத்தில் பல இடங்களில் பரீக்ஷண முயர்ச்சிகள் நடை பெறுகின்றன. ஸர்வெண்ட்ஸ் ஆப் இந்தியா ஸங்கத்தைச் சேர்ந்தவராகிய மிஸ்டர் வெங்கடசுப்பய்யா அவர்களுடைய நிர்வாஹத்தில் ஓர் விதமுயர்ச்சிகள் நடைபெறுகின்றன. மேற்கூறிய ஸ்தாபனத்தில் சாகுபடி வரவு சிலவுக் கணக்குகள் வைக்கப்படவேண்டிய வகையிலும், விவஸாயிகள் எப்பொழுதும் போல் நிலத்தை சாகுபடிசெய்து வரவு சிலவுகளை நடத்துகிற வழியைக் காட்டிலும் சாஸ்திரமுறைகளின்படி நிலத்தில் பயிர் செய்து கணக்குகளை வைத்தால் அதிக வரும்படி யுண்டாகுமாவென்கிற வகையிலும், நவீன எருக்களையும், நல்ல விரைகளையும், தழை, சாணி எரு இவைகளையும், உபயோகிப்பதும் விதை விதைக்கிற வழியில் நவீன விதங்களையும், இரும்பு கலப்பையையும் உபயோகிப்பதும் தக்கபடி அதிக வரும்படியை உண்டாக்கக்கூடுமா வென்கிற வகைகளிலும், கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் எத்தன்மையான ஒத்தாசைகளை கிராமச்

சீரமைப்பு முயற்சிகளில் கொடுக்கக் கூடுமென்கிற வகையிலும் கிராமங்களில் எல்லா ஜனங்களும் கல்வியை அனுஷ்டிக்க வேண்டிய வகையிலும், பரீக்ஷை முயற்சிகள் கைக்கொள்ளப்பட்டிருக்கின்றன. செங்கல்பட்டு ஜில்லா போர்டாரும் பல ஸ்தலங்களில் இவ்வித முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். மேலும், அவர்கள் கவர்மெண்டு அபிவிருத்தி இலாகாவின் உத்தியோகஸ்தர்கள் இவ்வித வேலைகளில் எவ்வாறு ஒத்தாசைகளைச் செய்யக்கூடு மென்பதையும் கவனித்தறிந்து வருகிறார்கள். போதனைகளில் விளக்குப்படக்காக்ஷிகளையும் பஜனை, காலக்ஷேபங்களையும் நடத்திவருகிறார்கள். கனம் ராம்தாஸ்பந்துலு அவர்கள் ஒருஏற்பாட்டை உடைத்தாயிருக்கிறார். அதன்படி அக்கம்பக்கக் கிராமங்களாயிருக்கிற அநேகக் கிராமங்களுக்கு ஒரு பொதுஸ்தலம் மேற்படுத்தப்பட்டு அதில் கிராமச்சீரமைப்புப் பரீக்ஷை முயற்சிகள் நடை பெறுவதோடு கிராம ஜனங்களுக்கு சமூகநன்மை வகையிலும் தரித்திரத்தை யொழிக்கிற வழியிலும் முயற்சிகள் நடத்தப்பட வேண்டு மென்பதுமாம். கனம் ராம்தாஸ் பந்துலுவின் ஏற்பாடானது கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களும் ஸமூகநன்மை ஊழியர்களும் ஒன்றுசேர்ந்து உழைப்பதற்குத் தக்கதாயிருக்கிறது. மேற்கூறிய மூன்று ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் திறமானதாகவேயிருக்கிறது. ஆகவே, இவைகளின் அம்சங்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு எல்லோரும் அனுஷ்டிப்பது நலம்.

கிராமங்களில் ஒவ்வொருவர் ஒவ்வொருவித முயற்சியில் ஊக்கமாக விருப்பதை நாம் சாதாரணமாக கவனிக்கக்கூடும். சிலர் நிலங்களிற்கு எரு விடுவதில் வெகு சிரத்தையாயிருப்பதைப் பார்க்கிறோம்; சிலர் நல்ல விரைகளையே வாங்குவதைப் பார்க்கிறோம்; சிலர் காகதாளி புதர்களையழிப்பதில் முயன்றிருப்பதைப் பார்க்கிறோம்; சிலர் நல்ல கிணறுகளை வெட்டுவதி லிருப்பதைப் பார்க்கிறோம்; சிலர் வேலி ஓரங்களிலும், தோட்டங்களில் பாதைகளின் இரு பக்கங்களிலும் வாழை, தென்னை, புளி முதலிய மரங்களையும் காய்கறிச்செடிகளையும் பயிர் செய்வதில் கருத்தாகவிருப்பதையும் காண்கிறோம். இப்படி ஒவ்வொருவர் பிரயாஸப்படுவதை கிராமங்களிலுள்ள இதரர்கள் கவனியாமல் தங்களுடைய சாகுபடி வேலையை மாத்திரமே அனுஷ்டிக்கிறார்கள். அவர்கள் கவனித்து அம்மாதிரி முயற்சிகளையும் பின் பற்றினால் அவர்கள் லாபத்தை அடைவார்கள் என்பதை



அவர்கள் அறிவாரில்லை. இன்னும், குடியானவப் பெண்பிள்ளைகளில் சிலர் ஆடுமாடுகளை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்கிறார்கள். தயிர், பால், வெண்ணெ இவைகளை அக்கம்பக்க ஊருக்குக்கொண்டு போய் விற்கிறார்கள். இப்பெண்பிள்ளைகள் இவ்வித வியாபாரத்தினால் பணத்தைச்சம்பாதித்து தங்களுக்கும் தங்களுடைய குடும்பங்களுக்கும் வேண்டிய வஸ்திரங்களையும், உப்பு புளி, மிளகாய் சாமான்களையும், குழந்தைகளுக்கு வேண்டிய மிட்டாய் முதலானவைகளையும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். கிராமங்களில் கிராம ஜனங்களின் போதனைகளுக்காக ஒரு நிரூபண நிலயிருக்க வேண்டும். அதில் வியவஸாய முயற்சிகள் செய்யப்பட்டு நிரூபணம் செய்யப்பட வேண்டும். இதோடு கூட, கிராமங்களில் யோகக்ஷேம ஒழுங்கிலும் சமூகக்ஷேம ஒழுங்கிலும் ஜனங்கள் தவறி நடவாமலிருப்பதற்கும் அப்படி அவர்கள் தவறிப்போனாலும் சரியான ஒழுங்கில் அவர்களை அமைப்பதற்கும் தக்கபோதனைகளையும் யோசனைகளையும் சொல்லக்கூடிய சமூகஊழியர்கள் இடைவிடாமல் வேலை செய்ய வேண்டும். இப்படி வேலை செய்கிற சமூக ஊழியர்கள் மேற்கூறியபடி தனி நபர்கள் வியவஸாய வேலையோடு இதர தொழில்களை அனுஷ்டித்து வரும்படிகளைச் சம்பாதிப்பதை அறிந்துகொண்டு மற்றவர்களுக்குச் சொல்லி அவர்களையும் அப்படியே முயற்சிகளைச்செய்யும் படிச் செய்யக்கூடும். கிராமங்களில் நடை பெறும் எல்லா முயற்சிகளையும் மேற்சொல்லிய சமூக ஊழியர்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ளக்கூடும். என் ஜனங்கள் நவீன வியவஸாய முறைகளைப்பற்ற முடிகிற தில்லை யென்பதையும் அறியத்தொடங்குவார்கள், காரணங்களையறிந்தபின்பு அவர்கள் அம்முறைகளைக் கைக்கொள்ளும் படிச்செய்ய எவ்வித முயற்சிகளை அவர்கள் அனுஷ்டிக்க வேண்டுமோ அவைகளையும் கண்டு பிடித்து வேலைசெய்வார்கள்.

கிராம ஜனங்கள் இங்கிலீஷ்படித்த பட்டண ஜனங்களைப் பார்த்து அவர்களுடைய பழக்க வழக்கங்களை யநுஸரிக்க முயலுவதால் தங்களுடைய யோகக்ஷேம செலவுகளையுயர்த்திக் கொள்கிறார்கள். தங்களுக்கு வரும்படி உயராமல் இருக்கும் பொழுது அவர்கள் இவ்வித அதிக அநாவசியச்செலவுகளைச் செய்கிறார்கள். தவிரவும், கீழ்த்தர வகுப்பு ஜனங்கள் தங்களுடைய சுவல்ப வரும்படியில் பெரும்பாகத்தைக் குடியிலும், புகைச்சுருட்டு, புகை இலை, வெற்றிலைபாக்கு இவைகளிலும் செலவு செய்கிறார்கள். கிராமங்களில் வேலை செய்யும் சமூக ஊழியர்கள் இச்சீர்கேடுகளைக் கவனித்து ஜனங்களுக்கு தக்க போதனைகளைச் செய்ய வேண்டும். கிராமங்களில் யோக க்ஷேமங்களை ஒழுங்காய் நடத்திக்கொண்டு செலவுகளைக் குறைவாகச் செய்கிற குடும்பங்கள் இருக்கக் கூடுமாகையால், சமூக ஊழியர்கள் அக்குடும்பங்களின் வழிகளைக் கவனித்தறிந்து கொண்டு ஒழுங்கில்லாத குடும்பங்களுக்குப் போதனைகளைச் செய்ய வேண்டும். மேலும், கிராமங்களில் திறமாக யோக க்ஷேம

ங்களை நடத்திக்கொண்டு வருகிற குடும்பத்தினர்களை ஒரு சங்கமாகச் சேர்த்துக்கொண்டு இடைவிடாமல் தினம் தினம் வீடு வீடாய்ப் புகுந்து பார்த்து போதனைகளை அநுஷ்டிக்கவேண்டும். அவர்கள் ஜனப்பிரமுகர்களோடு கலந்து கொண்டும் இவ்வித முயர்ச்சிகளில் யோஜனைகளை அடைய வேண்டும்.

விவஸாய விசாரணைசபையார் கிராமச்சீரமைப்பு சம்பந்தமாய் யோசனைகளைச் சொல்லவில்லை யென்று சிலர் அவர்களின் ரிபோர்ட்டைப்பற்றிக் கண்டனம் செய்கிறார்கள். இப்படிக்கண்டனம செய்வது சரியல்ல வென்று நாம் கூறுவோம். ஏனென்றால் நமது மாஹாணத்தில் வெகுபெயர்கள் வெகுஸ்தலங்களில் அநேகவிதங்களில் கிராமச் சீரமைப்பு முயர்ச்சிகளைச் செய்து பயன்களை அறிய முயலுகிறார்கள்.

## இந்தியா தேசத்திலுள்ள மாடுகள்.

[“ரூரல் இந்தியா” பத்திராசிரியராகிய ரிடையர்ட் டிப்டி கலெக்டர் ம—ா—ா—ஸ்ரீ ஆர்காடு சுவாமிநாத ஐயர் பி. ஏ. அவர்கள் எழுதியது]

மாடுகளுள் இரண்டு முக்கியமானவகைகள் இருக்கின்றன: முசப்பையுடைய வகையொன்று, மற்றொன்று முசப்பில்லாதவகை. முசப்பையுடையவகை இந்துதேசத்தியமாடுகளும்ஆப்ரிக்கா கண்டத்தின் மாடுகளும்; முசப்பில்லாத வகை மேனாட்டுவகை. மனிதர்கள் விவஸாயத்தைச் செய்ய எந்தக்காலத்தில் ஆரம்பித்தார்களோ அக்கால முதற்கொண்டே அவர்கள் மாடுகளை வளர்த்துவைத்துக் கொள்வதை அநுஷ்டித்து வந்திருக்கிறார்கள். வேதம் எழுதப்பட்ட காலத்திற்கு முந்தியே இவ்வழக்கம் இருந்திருக்கிறது. ரிக் வேதத்தில் ருத்திரனுக்கான மந்திரங்களில் மாடுகளை ரக்ஷிக்க வேண்டுமென்று கூட பிரார்த்திக்கப் படுகிறது.

மாடுகள் உருவத்திலும் வர்ணத்திலும் பல வித்தியாஸங்களோடு இருக்கின்றன. தோலிலும், அவயவங்களிலும், கொம்புகளிலும் கூட வித்தியாஸங்களை வஹிக்கின்றன. இந்தியமாடுகள் ஐரோப்பிய மாடுகளைப்போல் துவனியை யுடைத்தாயில்லை. இந்திய மாடுகள் நீண்ட கால்களோடும் அதிக சதைகளை யுடைத்தாயில்லாத சரீரங்களுடனு மிருக்கின்றன. வெகுசாய் இந்தியமாடுகள் சரீரம் முழுவதும் வர்ணக்கலப்பில்லாமல் ஒரே வர்ணத்தை உடைத்தாயிருக்கின்றன. அவைகளுள் வெள்ளை மாடுகள்தான் அதிகமானவை. கலந்த வர்ணங்களுடைய இந்தியமாடுகள் ஐரோப்பிய ஜாதியின் ரக்தசம்பந்தத்தை யுடையவை.

மாடுகளின் அபிவிருத்தி அவைகளின் பிரதேசங்களின் சீதோஷ்ண ஸ்திதிகளைப் பொருத்திருக்கிறது. பசு வர்க்கமானது அதிக மழையில்லாத, ஈரமில்லாத, உலர்ந்தப்பிரதேசங்களில் நன்றாய் விருத்தியாகிறது. மைசூர், பஞ்ஜாப், ஸிந்து இந்தப்பிரதேசங்களைச்



சேர்ந்தபசுக்கள் வெகு சேர்த்தியா யிருக்கின்றன. மழை அதிகமாகவும், பூமிஈரமாகவும் உள்ள வங்காளம், மலையாளம் முதலிய இடங்களில் மாடுகள் நன்றாயில்லை. ஆனால், எருமை மழை அதிகமானப் பிரதேசங்களில் தான் நன்றாயிருக்கிறது. சில மழை அதிகமான ஊர்களில் அது, பசுவர்க்கத்திற்குப் பதிலாக உழவிற்கும் உபயோகிக்கப் படுகின்றன.

மாடுகள் அவைகளின் பிரதேசத்தின் நில விசேஷத்தினால் கூட வித்தியாஸங்களை வஹிக்கின்றன. பருத்தி விளைகிற கரிசல்ப்பிரதேசங்களில் குஜிலிய மாடுகளும் ஆலம்பாடி வகையும் விருத்தியாவதைக் காண்கிறோம். அதிகமாய் மனிதனுடைய உணவுப் பொருள்கள் சாகுபடி செய்யப்பட்டு மேய்ச்சல் பூமிகள் குறைவாக இருக்கிறப்பிரதேசங்களில் மாடுகள் குட்டையாகவும் நருங்கலாகவும் இருப்பதை நாம் காண்கிறோம்.

தென் இந்தியாவில் உள்ள மாட்டுவகைகளை விவரிப்போம்; மைசூர் ராஜ்யத்தில் அமிருதமஹால் ஜாதிஎன்பது வெகு சேர்த்தியான ஜாதி; நன்றாய் ஓடக்கூடியது, ராணுவ இலாகாக்காரர்கள் இந்த ஜாதி மாடுகளை யுபயோகிக்கிறார்கள். மைசூரில் காவேரி நதியின் பிரதேசத்திலுள்ள வெள்ளை எருதுகளும் திறமானவைகள். புங்கனூர் மாடுகளென்று சொல்லப்பட்டவைகளும் மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்தவைகள்தான். ஆனால் இந்த ஜாதியானது இப்பொழுது அற்றுப் போய்விட்டது. கலப்புப் புங்கனூர் மாடுகள்தான் இப்பொழுது காணப்படுகின்றன. அவைகளுள் எருதுகள் சேலம், வடஆர்காடு ஜில்லாக்களில் கவலைகளை இழுக்கின்றன. கோயம்புத்தூரிலும், சேலத்திலும் ஆலம்பாடி மாடுகள் அதிகமாக விருக்கின்றன. அவைகள் வண்டி மாடுகளாக உபயோகப் படுத்தப்படுகின்றன. காங்கயத்தில் ஒரு ஜாதி இருக்கிறது. அவ்வகையில் பசுமாடுகள் நல்லகறவை மாடுகள், எருதுகள் நல்லவண்டிமாடுகள். இன்னொரு உயர்வான மாட்டுவகை ஒங்கோல் ஜாதி. இதில் பசுமாடுகள் நல்லகறவை மாடுகள், எருதுகள் உழவிற்கும் சவாரிக்கும் வெகு திறமானவைகள். உலகத்திலேயே ஒங்கோல் ஜாதி மாடுகள் தான் உயர்வான ஜாதியென்று சொல்லப் படுகிறது. அந்த ஜாதி க்ஷீணித்துப்போய்க் கொண்டிருப்பதாக அநேகர் சொல்கிறார்கள்.

மாடுகளைச்சினைப்படுத்துகிற விஷயத்தில் காளைகள் திறமானவைகளாக விருக்கவேண்டும். காளை மாடுகளின் இலக்ஷண ஒழுங்குதான் உற்பத்தியாகும் கன்றுகளுக்கு இலக்ஷணங்களைக்கொடுக்கக் கூடியது. விவஸாயிகள் மாடுகளை அபிவிருத்திசெய்யவேண்டும். திறமான நல்ல ஜாதி மாடுகளை வைத்து வளர்க்கவேண்டும். பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்கள் மாடுகளை வளர்த்து அபிவிருத்தி செய்வார்களாகில் நம்முடைய மாஹாணத்திய மாட்டு அபிவிருத்தி விஷயம் சரியாயமையும்.

## செடிவர்க்கங்களின் விஷயங்கள்.

(70வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி)

**அத்தியாயம் III: செடிகளில் வித்தியாஸங்கள் எப்படி ஏற்பட்டன?**

[ம-ள-ள-ஸ்ரீ டி. வி. சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதியது]

செடிகள் ஒன்றைப்போலொன்று இல்லாமல் இருக்கின்றனவே. சில செடிகள் மரங்களாக வளருகின்றன; சில செடிகள் செடிகளாகவே இருக்கின்றன; சில செடிகள் புல் பூண்டுகளாக விருக்கின்றன. சில செடிகள் ரோஜாவைப் போன்ற புஷ்பங்களை வஹிக்கின்றன; சில செடிகள் ஊமத்தம் பூவைப்போன்ற புஷ்பங்களை வஹிக்கின்றன. சில செடிகள் குட்டையாயிருக்கின்றன; சில செடிகள் உயரமாயிருக்கின்றன. சில செடிகளின் புஷ்பங்கள் பிரகாசமாகவும், கண்டுபிடிக்கக் கூடியவைகளாகவும் இருக்கவில்லை; சில செடிகளின் புஷ்பங்கள் அழகாகவும் காந்தியுடனும் இருக்கின்றன. சில செடிகள் சிறிய கொட்டைகளைக் கொண்ட சிறியபழங்களை வஹிக்கின்றன; அப்பழங்கள் தரையில் ஓசையில்லாமல் விழுகின்றன. சில செடிகளின் பழங்கள் நல்வர்ணங்களுடனும் மயிர் மூடின விரைகளுடனுமிருக்கின்றன. இவ்வித வித்தியாஸங்கள் எல்லாம் எப்படி ஏற்பட்டன?

முதல் முதலில் இருந்த செடிவர்க்கமானது ஜலத்தில் மிதந்து வளர்ந்து கொண்டிருந்த ஓட்டடை போன்றது. அது தான் மிதந்து கொண்டிருந்த ஜலத்திலிருந்தே கார்பானிக் ஆஸிடை கிரஹித்துக்கொண்டு சூர்ய வெளிச்சத்தின் ஒத்தாசையால் அதை தன்னுடைய உயிர்ப்பொருளாகிய பச்சை வஸ்துவாக செய்து கொண்டது.

செடிகள் மேற்சொன்ன உயிர் வஸ்துவை வஹிக்கிற தனித்தனியான ஸெல்கள் என்று சொல்லப்பட்ட சிறிய துண்டுகளின் சேர்க்கைகள். கீழ்த்தர செடிகளுக்கு ஒரே ஸெல்தான் இருக்கிறது. இவ்விதச் செடிகளில் ஸெல் பெரிதாக வளர்ந்து கொண்டு வந்து இரண்டு ஸெல்களாக பிரிந்து பின்பு தனித்தனி ஸெல் ஆகவே இரண்டும் ஜலத்தில் மிதக்கும். இப்படிமிதக்கும் பிரிவுபட்ட ஸெல்கள் ஒவ்வொன்றும் மேல் மேலும் வளர்ந்து அவைகளும் இரண்டு ஸெல்களாகப்பிரிந்துகொண்டுபோகும். இவ்விதமான பிரிவுவேலை ஓயாமல் நடந்து வருமாகையால் ஏராளமான செடிகள் உண்டாய் விடும். ஆனபோதிலும் இவ்விதமாய் ஸெல்கள் முதிர்ந்து இரண்டாகப்பிரிவது அவைகள் தங்களுக்குப் போதுமான கார்பானிக் ஆஸிடையும் சூர்ய வெளிச்சத்தையும் அடையக் கூடிய வரையில்தான். சில வகைகளில் புதியஸெல்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு சரம் சரமாக தொங்கிக்கொண்டிருக்கின்றன. இப்படி ஸெல்கள் சரம் சரமாக ஒட்டிக்கொண்டிருப்பதுதான் மேல்த்தர வகுப்புச் செடிகள் ஏற்படுவதற்கு மூலகாரணமாயிருக்கிறது.



உயர்தர வகுப்புச்செடிகள் கீழ்தர வகுப்புச் செடிகளிலிருந்து அதிக ஸெல்களை யுடைத்தாயிருத்தலினாலேயே வித்தியாஸப்படுகின்றன வென்பதில்லை. அவைகள் தங்களுடைய ஸ்தலவிசேஷத்திற்கேற்றமாதிரியும் அவைகளிருக்கப்பட்ட தேசங்களின் பூச்சிகள் பறவைகளுக்கேற்றமாதிரியும் அமைகின்றன. காடுகளில் உள்ள சில விருக்ஷங்கள் மொறட்டு இலைகளை வஹிக்கிறதற்குக் காரணம் அவைகள் நீரை வற்றவிடாமலிருக்க வேண்டிய நிமித்தம்தான். செடிகளின் புஷ்பங்கள் பூச்சிகளை மோஹித்து அவைகளை தேனிற்காக வென்று வரவழைத்து தங்களின் பிரஜா விருத்தி முயர்ச்சிகளுக்கு அவைகளை உபயோகிக்கிறபடியால் அந்தந்த தேசத்திலுள்ள பூச்சிகளுக்கேற்றவாறு அவைகள் அமைகின்றன. அதுபோலவே, சில செடிகள் பறவைகள் பழங்களை கொத்தித்தின்று விழுங்கிகொட்டைகளையோ விரைகளையோ விஸர்ஜனம் செய்வதால் முளைக்கிறபடியால் அப்பறவைகளின் விழுங்கி விஸர்ஜனம் செய்யக்கூடுகிற சக்திக்கேற்றவாறு பழங்கள் செடிகளில் ஏற்படுகின்றன. மேல்மேலும் செடிகள் அதிகமாக உண்டாகிக்கொண்டு வருகிறபடியால் அவைகளிலிருந்துகொண்டு வளர்வதற்கு இடமும் சூர்யவெளிச்சமும், மற்ற சௌகரியங்களும் குறைவு பட்டுப்போகின்றன. இவ்வித அசௌகரியங்கள் ஏற்படுகிறபடியால் அநேகமான செடிகள் பூமியிலிருக்க முடியாமல் அழிவை அடைகின்றன. எச்செடிகள் மாறிப்போன சௌகரியங்களுக்கு ஒத்துவரக்கூடுமோ அவைகள் அழியாமல் ஓங்கிவளர்ந்து சந்ததிகளையும் உண்டாக்குகின்றன.

பிரஜாவிருத்தியானது மேல் மேலும் நடைபெறுவதாலும், விருத்தியாகிக் கொண்டுவருகிற பிரஜைகளுள் எவை குறைந்த ஸ்தல சௌகரியத்திற்கும் குறைந்த சூர்ய வெளிச்ச சௌகரியத்திற்கும் குறைந்த இதர சௌகரியங்களிற்கும் இணங்கி வளரக்கூடுகின்றனவோ அவைகள் வகை வித்தியாசங்களை அச்சௌகரியங்களிற்கு ஏற்றவாறு அடைகின்றன. இவ்விதமாகத்தான் ஆதியிலிருந்த ஓட்டடை போன்ற ஜீவன்களிலிருந்து பாசிகளும், புல்களும் பெர்ன்களும் பூக்களையுடைய செடிகளும், விருக்ஷ வகைகளும் உண்டாயின. ஆகவே உலகத்திலுள்ள எல்லாச் செடிகளும், விருக்ஷங்களும் ஒரே வித ஜீவன்களின் சந்ததிகளே. ஆனால் இச்சந்ததிகள் வகை வித்தியாஸங்களை வஹிக்கின்றன வென்பதை நாம் காண்கிறோம். ஏன் அவைகள் அவ்வித்தியாஸங்களை வஹிக்க வேண்டுமென்று பின்னே சொல்லப்பட்ட விஷயங்களினால் நன்கு விளங்கும். ஒரே வகைச் செடிகளுள் வெள்ளைப் புஷ்பங்களையுடைய உள்வகையொன்றும், சிகப்பு, மஞ்சள், இவ்விதப் பிரகாசமான வர்ணங்களைக்கொண்ட புஷ்பங்களையுடைய வகையொன்றுமிருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா? வெள்ளைப் பூ உட்பிரிவு இராக்காலத்தில் அல்லது சூர்யாஸ்தமனத்திற்குப் பின்பு புஷ்பிக்கிறது. புஷ்பிக்கிற புஷ்பங்கள் நல்ல வாஸனையையுடைத்தாயிருக்கின்றன. வர்ணங்களையுடைய

உட் பிறிவு பகல் காலங்களில் தான் புஷ்பிக்கிறது. புஷ்பங்களின் அடிபாகங்களில் தேனிருக்கிறது. பூச்சிகளுக்கு தேனிருப்பதைத் தெரிவிக்கிறதற்காக இராக்காலங்களில் புஷ்பிக்கிற செடிகள் வெள்ளைப் புஷ்பங்களை வஹித்து பரிமளங்களை வீசுகின்றன. ஏனென்றால் வர்ணங்களையுடைய புஷ்பங்கள் இரவில் புலப்படா. வெள்ளை நிறம் தான் கண்டுபிடிக்கப்படக்கூடும். வாஸனை வருவது அவைகளிருக்கிற ஸ்தலங்களைக் குறிப்பிடுகின்றது. இராக்காலத்தில் வண்டுகளும், பிரகாசமான இறக்கைகளையுடைய பூச்சிகளும் சஞ்சரிக்கிறதில்லை. கொசு முதலான அல்ப பூச்சிகள் தான் சஞ்சரிக்கின்றன. வெள்ளைப்பூ உட் பிறிவு அந்தக் காரணத்தைக் கொண்டு தான் வெள்ளைப்பூவை இராக்காலத்தில் உண்டாக்கி வாஸனைகளை வீசி பூச்சிகளை வரவழைக்கிறது. வர்ணங்களையுடைய புஷ்பங்களை உடைய உட்பிறவு பகலில்தான் புஷ்பிக்கிறது. நல்ல வர்ணங்களையுடைய புஷ்பங்களை உண்டாக்கி வண்டுகளையும் பாவாடைப் பூச்சிகளையும் மோஹித்து வரவழைக்கிறது. ஏன் இவ்விரு உட்பிறிவுகளும் பூச்சிகளை வர வழிக்கவேண்டும் தேனை எதற்காக அவைகள் வஹிக்கவேண்டும்? சம்போகம் செய்து சந்ததிகளையடைய வேண்டுமென்கிற நோக்கத்துடன்தான். பூச்சிகள் புஷ்பங்களில் தேனையடைவதற்காக புகுந்து பிகுந்து செல்லுகையில் ஒரு புஷ்பத்தின் ஆண் இந்திரியத்தை மேலே பூசிக்கொண்டு மற்றொரு புஷ்பத்தின் கர்ப்பப்பையில் அதைச் சேர்த்து விடுகின்றன. பூச்சிகள் புஷ்பங்களில் இவ்விதமாக நுழைந்து வந்த பின்பு ஆண்பெண் சம்பந்த மேற்பட்டு கர்ப்பப்பைகளில் உள்ள சிறிய முட்டை போன்ற விரைகள் முற்ற ஆரம்பித்து கர்ப்பப்பையே காயாகிப் பழமாகி மேற்சொல்லிய விரைகளோடு ஏற்படுகின்றன. விரைகள் தான் செடிகளுக்கு மூலம் என்பது விவரிக்க வேண்டியதில்லை. ஆகவே, வெள்ளைப்பூ உட்பிறிவுதான் உலகத்தில் சந்ததிகளோடு இருந்து வரவேண்டிய நிமித்தம் இராக்காலத்தில் வாஸனையோடு வெள்ளைப் பூக்களையுண்டாக்கி பூச்சிகளை வரவழித்து சந்ததி விருத்தி முயர்ச்சிகளை அநுஷ்டிக்கிறது. அதுபோலவே வர்ணமுள்ள புஷ்பங்களையுடைய உட்பிறிவு பகல் காலத்தில் பிரகாசமான நல்ல வர்ணங்களையுடைய மலர்களை யுண்டாக்கி வண்டு, பாவாடைப்பூச்சி முதலியவைகளை மோஹித்து மேற் சொல்லியபடி சந்ததி விருத்திகளை அநுஷ்டிக்கிறது. ஆகவே, இவ்விரண்டு உட்பிறிவுகளும் அவைகள் உலகத்தில் அழியாமல் சந்ததிகளை விருத்தி செய்து கொண்டு இருக்க வேண்டிய நிமித்தம் வேறு பாடுகளையும் வித்தியாஸங்களையும் வஹிக்கின்றன. இப்படிப்போலவே எல்லாவகைச் செடிகளும் உண்டாய் உலகத்தில் பரவியிருக்கின்றன வென்பது இப்பொழுது புலப்படும்.



## வர்த்தமானக்குறிப்பு.

சென்ற மார்ச்சு ௴ முதல் தேதியன்று மாக்ஷிமைதங்கிய நமது சக்கிரவர்த்திகள் புதிய வருஷத்திற்காக கௌரவ பட்டங்களையளித்தார். சிதம்பரம் காலாசாலையை ஏற்படுத்திய நாட்டுக்கோட்டை வகுப்பிற்கு ரத்தினமாக விளங்கும், ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு ராஜா வென்கிறபட்டம் கொடுக்கப்பட்டதைப் பற்றி தமிழ் ஜனங்கள் யாவரும் களிப்புறுவார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. நம்முடைய ஜனங்களின் அபிவிருத்தி விஷயமாய் பல ஊழியங்களைச் செய்துவரும் ஜஸ்டிஸ் ராமேசம்பந்துலுவிற்கு நைட்ஹூட் பட்டம் கொடுக்கப்பட்டது. ரெவினியூபோர்டு மெம்பராகவிருந்து பாரெஸ்டு பஞ்சாயத்து இலாகாவை நிர்வகித்து அவைகளின் அபிவிருத்தி விஷயமாய் வேலைசெய்த மிஸ்டர் எச். ஏ. பி. வெர்னனுக்கு ஸீ. ஐ. ஈ பட்டம் கொடுக்கப்பட்டது. வியவஸாய விசாரணை சபையின் அங்கத்தினராகிய மிஸ்டர் என். என். கங்குலிக்கு ஸீ. ஐ. ஈ கொடுக்கப்பட்டது. இவ்விதமாக மேற்சொல்லிய கனவான்கள் கௌரவப்படுத்தப் பட்டதைப்பற்றி நாம் நிரம்பவும் சந்தோஷப்படுகிறோம்.

---

சென்னை கவர்னர் அவர்கள் கவர்மெண்டு இலாக்காக்களின் தலைவர்களோடு வியவஸாய விசாரணை சபையாரின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய விஷயமாய் ஆலோசனைகளைச் செய்துவந்து முடிவில் ஒரு கம்மிட்டியை ஏற்படுத்துவதாய்த் தீர்மானித்தார். இந்தக்கம்மிட்டியானது 11 ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் ஆந்திர, திராவிட, கேரள, கர்னாடக நாடுகளிலிருந்து 4 உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்களையும் அங்கத்தினர்களாக வகிக்கும். ஆலோசனைகளைச்செய்து முயர்ச்சிகள் கைக்கொள்ளப் படவேண்டிய துறைகளையும் வழிகளையும் அது எடுத்துக் காட்டும்.

---

ஓங்கோலில் நடைபெற்ற பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்களின் மஹாநாட்டில் தீர்மானிக்கப் பட்டபடியே சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சங்கமென்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சங்கம் தாமதமின்றியில் வேலை செய்யத்தொடங்கி விட்டது. பஞ்சாயத்துகளின் முயர்ச்சிகளையும் இதர விவரங்களையும் குறைகளையும் அறிய வேண்டிய நிமித்தம் ஒரு அச்சிட்ட பாரத்தைப்பிரதிப் பஞ்சாயத்திற்கும் அது அனுப்பியிருக்கிறது.

---

பாரெஸ்டுப்பஞ்சாயத்து சங்கத்தில் உதவி அக்ராஸனாதிபதியாக விருக்கும் திவான்பஹதூர் எஸ். குமாரஸாமி ரெட்டியார் அவர்கள் ஸர் கே. வீ. ரெட்டி அவர்களுக்குப் பதிலாக பிஷரீஸ் கம்மிட்

டிக்கு அக்ராஸனராக நியமிக்கப்பட்டாரென்பது நமது பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கது.

---

மதுரை ஜில்லா போர்டார் உசிலம்பட்டியில் ஒரு விவசாய போதனை சாலையை ஏற்படுத்தப் போகிறார்கள். கட்டிடத்திற்கு அஸ்தி வாரக்கல்லானது விவசாய இலாகாவின் தலைவராகிய மிஸ்டர் ஆர். டீ. அன்ஸ்டட் அவர்களால் நாட்டப்பட்டது. உசிலம்பட்டியானது கள்ளர்களின் பிரதேசத்தில் இருக்கிறது. ஆகையால் கள்ளர்களின் முன்னேற்றத்திற்கு அது வெகு உபயோகமான ஸ்தாபனமாகும். இதுபோலவே இதர ஜில்லா போர்டுகளும் விவசாய போதனைசாலைகளை தக்க இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வோம்.

---

மாட்டுமரண ஸங்கியையானது நமது மாகாணத்தில் 1927-28 இல் 76196ஆக விருந்தது. இதற்கு முந்தின வருஷத்தில் அது 59084ஆக விருந்திருக்கிறது. கவர்ன்மெண்டார் 1927-28இல் புதிய 11 மாட்டுவைத்திய சாலைகளை ஏற்படுத்தினார்கள். தவிரவும் மாட்டு வைத்தியர்களைக் கிராமங்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து நோய்களை உடையமாடுகளுக்கு சிகிச்சை செய்யும்படியும் உத்திரவிட்டிருந்தார்கள். ஆகையால் மாட்டு நோய்கள் மேல் மேலும் அதிகமாவதற்கும், மாடுகள் அதிகமாக மாண்டுபோவதற்கும் காரணங்கள் புலப்படவில்லை. மாட்டு நோய்களின் சம்பந்தமாகவும், அவைகளின் மரணசம்பந்தமாகவும் கிராம உத்தியோகஸ்தர்கள் கணக்கு விவரங்களை சரிவர வைக்கிறதில்லை. ரெவின்யூ உத்தியோகஸ்தர்களும் இதை கவனிக்கிறதில்லையென்பது விசனிக்கத்தக்கது.

---

கட்டாயக்கல்வி முறை சீக்கிரத்தில் கிராமாந்தரங்களில் ஆண் பெண் இருதரத்தவர்களுக்கும் ஏற்பட்டால் ஒழிய கிராம ஜனங்களிற்கு முன்னேற்றமேற்படாதென்று விவசாய விசாரணை சபையார் கூறியிருக்கிறார்கள். கட்டாயக்கல்வி ஏற்பட்டால்தான் கிராம ஜனங்களுக்கு கூட்டுறவு விஷயங்களில் போதனைகள் சரிவர நடத்தக்கூடும். கூட்டுறவு வழிகளின் மூலமாகத்தான் கிராம ஜனங்கள் க்ஷேமத்தை அடையக்கூடும். விவசாயவிஷய போதனைகள் ஆரம்ப பள்ளிக்கூடங்களில் நடத்தப்படக்கூடாது. மத்தியதரப்பள்ளிக்கூடங்களில் தான் போதனைகளில் அவைகள் சேர்க்கப்படுவது நலம்.

---

நம்முடையதேசத்தில் பட்டணங்களிலுள்ள குழந்தைகள் எலும்பு சிம்பியிருப்பதை நாம் காண்கிறோம். கிராமங்களிலுள்ள குழந்தைகள் இப்படி மார்கொண்டைகள் பின்னிக் கொண்டும் எலும்புகள் சிம்பிக்கொண்டுமில்லையே. பட்டணங்களில் இவ்வித நோய்க்குக் காரணம் ஜனநெருக்கமுள்ள பிரதேசங்களிலும் வீடுகளிலும் ஜனங்கள் வசிப்பதுதான். தவிரவும், அவ்விடங்களில் வீடுகள் தகுந்த காற்று சௌகரியங்களுடனும் சூரிய வெளிச்சமும் இல்லாமலிருப்பதும் மற்றொரு காரணம். ஜனங்கள் சுலபமாயடையக் கூடிய இவ்விரண்டு சௌகரியங்களை ஏன் அடையாமலிருக்கிறார்களோ தெரியவில்லை. எலும்புகள் வளருவதற்கு கால்ஷியமும், உப்பும் பாஸ்பரஸும் உணவில் தக்கபடி நிறைந்திருக்க வேண்டும். இவைகளையுடைத்தான உணவுப்பொருள்கள் புஜிக்கப்பட வேண்டும்.



---

நீலகிரியில் கர்னல் மாக்கரிஸன் செய்யும் உணவுப்பொருள்களின் சப்பந்தமான ஆராய்ச்சிகளைப்பற்றி முந்திய சஞ்சிகை ஒன்றில் விவறித்திருக்கிறோம். அவர் இப்பொழுது இந்தியாவில் ஜனங்கள் சாப்பிடும் உணவுகளில் உள்ள குறைகளைப் பற்றியும், அவைகளால் ஏற்படும் நோய்களைப்பற்றியும், அவைகளுக்கு எப்பொருள்களை சேர்த்தால் அவ்வித நோய்களுண்டாகா வென்பதைப்பற்றியும் கண்டறிவதற்காக ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்.

உணவுகளில் புரோடீன்ஸ, கொழுப்பு, கார்போஹைட்ரேட்ஸ், ஜலம், உப்புகள் மாத்திரம் இருந்தால் போதாதாம். இவைகள், உடம்பில் உஷ்ணத்தையும் சலன சக்தியையும் உண்டுபண்ணுவதற்கு அவசியமானவைகள் தான். ஆனால் உணவுகளில் வைடமின்ஸ என்கிற ஜீவனப்பொருள்கள் இல்லாவிட்டால் மேற் கூறப்பட்ட வஸ்துகள் உபயோகப்படாமல் வீண்போகுமாம். வைடமின்ஸ் என்றவைமேற் கூறப்பட்ட உணவு அம்சங்களை சரீரம் உட்கொள்ளுமாறு வேலை செய்கின்றன. வைடமின்ஸ தக்கபடியில்லாத உணவுகள் உட்கொள்ளப்பட்டால் நோய்கள் உண்டாகும். இந்தியாவில் கீழ்த்தர ஜனங்களுக்கு உண்டாகும் நோய்கள் இக்காரணத்தினால் தான் உண்டாகின்றன. கோதுமை வைடமின்சுள்ள உணவுப்பொருள். அரிசியில் அவைகள் வெகு குறைவாயிருக்கின்றன. அரிசியைசாப்பிடுகிறவர்களின் உடம்பையும் காந்தியையும் விட கோதுமையைச் சாப்பிடுகிறவர்களின் உடம்பு காந்தியும் மேலானதாக விருப்பதை நாம் காண்கிறோம். குஷ்டரோகம் அரிசியை புஜிப்பவர்களைத்தான் அதிகமாகத் தாக்குகிறது. அரிசியை உண்பவர்கள் கீரைகளையும் காய்கறிகளையும் அதிகமாக புசிக்க வேண்டும். பாலும் அதிகமாக உட்கொள்ளப்பட வேண்டும்.

---

ரைட் ஹானரபில் வி. எஸ் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்துவிட்டார். தென் ஆபிரிகாவில் வெகு உயர்வான வேலைகளைச் செய்திருக்கிறார். எஜண்டு ஜனரல் வேலைக்கு இவருக்குப்பதிலாக நியமிக்கப்பட்ட ஸர் கே வி. ரெட்டி நாயுடு அவர்களும் அத்தன்மையாகவே வேலை செய்வார் என்பதில் சந்தேகமே இல்லை.

---

திவான்பஹதூர் ராகவய்யா ஸீ. எஸ். ஐ., அவர்கள் புதுக்கோட்டை சமஸ்தான ராஜ்யபார ஸபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டது நமக்கு திருப்தியைக் கொடுக்கிறது. அவா ஓர் பெரிய ஸமஸ்தானத்தில் வெகு திறமையுடன் திவானாகவிருந்தது மன்றி சிலகாலம் சென்னை ரெவினியூ போர்டு மெம்பராகவு மிருந்தார். விவஸாய விசாரணை ஸபையிலும் மெம்பராகச் சேர்க்கப்பட்டார். அவர் விவஸாய விஷயத்திலும் தேசத்தின் செல்வநிலை விஷயங்களிலும் நிரம்ப அநுபவமுள்ளவ ராதலால் புதுக்கோட்டை சமஸ்தானத்திய ஜனங்கள் இவருடைய அதிகார காலத்தில் முன்னுக்கு வருவார்களென்பதில் யாதொரு சந்தேகமு மில்லை.

---

கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களில் புதிய செட்டில் மெண்டு நடை பெற்று முடிந்தது. அந்த செட்டில் மெண்டின்படி உயர்ந்த தீர்வை விதங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன் அந்த ஜில்லாக்களின் ஜனங்களின் செல்வ நிலையானது ஸர்க்கார் உத்தியோகஸ்தர் களல்லாத அங்கத்தினர்கள் சேர்ந்த ஒரு சபையால் சோதிக்கப்பட வேண்டுமென்று சட்டஸபை தீர்மானித்த படியால் கவர்மெண்டார் அதில் மா—ா—ஸ்ரீ, டீ. நாராயண ராஜுகாரு, டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள், பி. வெங்கிடரத்தினம் காரு, திவான் பகதூர் பி. வி. எத்திராஜுலு நாயடுகாரு வி. ஆர் சாமி காரு, திவான்பஹதூர் ஆர். என். ஆரோக்கியசாமி முதலியார் அவர்கள், பி. ராமச்சந்திர ரெட்டிகாரு இவர்களை ஒரு அதிகாரம்வஹிக்கிற ஸபையாகக் கூட்டி நியமித்திருக்கிறார்கள்.

---

சேத் கோவிந்த தாஸ் அவர்கள் அஸெம்பிளியில் கறவைப் பசுக்களின் ரக்ஷணை நிமித்தம் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்த தீர்மானம் அங்கீகரிக்கப் படவில்லை யென்பது விசனிக்கத்தக்கது. நம்முடைய தேசத்தில் பால் கஷ்டத்தினால் கோடியான குழந்தைகள் மாண்டு போகின்றன. பசுக்களைக்கொல்வது நிறுத்தப்பட்டால் பால் வேண்டிய வரையில் குழந்தைகளின் போஷணத்திற்கு அகப்படக் கூடும் என்பது நிச்சயம்.

---

சென்னைச் சட்டசபையில் கவர்மெண்டார் ஆஜர்படுத்தியிருக்கிற சிலவு திட்டத்தின்படி 1821 லக்ஷ ரூபாய்கள் மொத்தச்சிலவு தொகையாகிறது. அந்தப்பெரிய தொகையில், கிராம ஜல சௌகரியச்சிலவிற்காக 5½ லக்ஷங்களும், கிராம ரஸ்தாக்கள் சம்பந்தமாக 9 லக்ஷங்களும் பகுக்கப்பட்டிருப்பது அத்தியாச்சரியப்படத்தக்கது. கவர்மெண்டார் கிராமாந்தர அபிவிருத்தி விஷயங்களில் எடுத்துக்கொண்டிருக்கிற ஊக்கம் இந்த விவரங்களாலேயே மதிக்கப்படக்கூடும். கிராமவைத்திய சம்பந்தமாகவும், மாட்டு வைத்திய சம்பந்தமாகவும் கூட சிலவு திட்டங்கள் தக்கபடி பகுக்கப்படவில்லை.

---



விவஸாய இலாகாவின் தலைவராகிய மிஸ்டர் ஆர். டீ அன்ஸ்டட் ஸீ. ஐ. ஈ. அவர்கள் தஞ்சை ஜில்லா நன்னிலம்தாலூகா சேடினிபுரம் கிராமத்திய விவஸாயக் கூட்டுச்சங்கத்தில் பேசும்பொழுது அவ்விதக்கூட்டுச்சங்கங்கள் எல்லா ஊர்களிலும் உண்டாகவேண்டிய அவசியத்தைப்பற்றி வற்புறுத்தினார். தஞ்சை ஜில்லாவிலும், திருச்சி, ஜில்லாவிலும் விவஸாயக் கூட்டுச்சங்கங்கள் ஏற்பட்டு வேலை செய்கின்றன. நல்லவிரை உபயோகிப்பதாலும், இரும்புகலப்பைகளினால் உழுவதாலும், எருக்களை சரியானபடி உபயோகிப்பதாலும், நாத்து நடுவதில் சரியான முறைகளை அநுஸரிப்பதாலும் உண்டாகக்கூடிய நன்மைகளை நிரூபணம் செய்வதோடு அவைகள் விரைகளை உற்பத்தி செய்து அங்கத்தினர்களுக்கு விக்கிரயம் செய்கின்றன. அவைகள் இரும்பு கலப்பைகளையும், எருக்களையும் தருவித்து விற்பனை செய்கின்றன.

---

மைசூர் கவர்மெண்டார் காடுகளின் அபிவிருத்தி விஷயமாயும் கீழ்த்தரவகுப்பினர்களின் முன்னேற்ற நோக்கமாகவும் ஆதிகர்நாடகர்களுக்கு ராஜாங்கக்காடுகளின் அருகில் நிலங்களைக்கொடுக்கத்தீர்மானித்திருக்கிறார்கள். நிலங்கள் குடும்பங்களுக்கு பாரம்பர்யபாத்தியதையுடன் கொடுக்கப்படுமாம். குடும்பங்கள் பாரெஸ்டு இலாகா உத்திரவுகளின்படி நடக்கவேண்டுமாம். பிரதிவருஷத்திலும் 1000 செடிகளை சர்க்கார்க் காடுகளில் நட்டுப்பாதுகாக்க வேண்டுமாம். பாரெஸ்டு இலாகாவிற்கு வேண்டும் பொழுது சம்பள ஏற்பாட்டில் வேலை செய்ய வேண்டுமாம். இவ்விதமாக 10 வருஷ காலம் திருப்தியாக நடந்து கொண்டால் நிலங்கள் குடும்பங்களுக்குச் சுவாதீனப் படுத்தப்படுமாம். மேற்சொன்ன 10 வருஷ காலம் வரையில் வரியே கிடையாது. அதற்குமேல் குடும்பங்கள் காண்டயத்தை பிரதி வருஷமும் பாரெஸ்டு இலாகாவிற்குச் செலுத்த வேண்டுமாம்.

---

நம்முடைய மாஹாணத்தில் 20 லக்ஷம் கைத்தரி நெசவுக்காரர்களிருக்கிறார்கள். கைத்தரி நெசவு நல்ல ஜீவன விருத்தி. முன் காலத்தில் விவஸாயிகளும் இதரர்களும் இத்தொழிலையும் ஸஹாயத் தொழிலாக அநுஷ்டித்து வரும்படிகளை அடைந்து வந்தார்கள். தற்போதில் நெசவுத்தொழில் தக்கபடி ஆதரிக்கப்படவில்லை. கவர்மெண்டார் அத்தொழிலைச் சரியானபடி அமைக்க முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். விவஸாய விசாரணை சபையாரும் அவ்விதமாகவே மொழிந்திருக்கிறார்கள்.

---

கிராமங்களில் எருவானது வேண்டிய மட்டில் அகப்படுகிறதில்லை யென்கிற கூக்குறல் இருக்கிறது. மிஸ்டர் அன்ஸ்டட் இது சம்பந்தமாய் சரியான புத்திமதிகளை விவஸாயிகளுக்குச் சொல்லு

கிறார், சாணி எருவையே உபயோகிப்பதற்குப் பதிலாக ஸல்பேட் ஆப் அம்மோனியா வையும் பாஸ் பேட்டையும் கூட உபயோகித்தால் அவ்வளவு பணச்சிலவாகாது என்றும், ரஸாயன எருக்களை மாத்திரமே உபயோகப்படுத்தப் படாதென்றும் கூறுகிறார். நம்முடைய தேசத்திய மிருக எலும்புகள் மேல் நாடுகளுக்கு ஏதுமதி செய்யப்படுவது தடுக்கப்பட்டால் எலும்புகள் உர உபயோகத்திற்கு பணச்சிலவு மில்லாமல் அகப்படும்.

---

சென்ற டிசம்பர் மாதத்தில் தென் கன்னடம் ஜில்லாவில் புத்தூர் தாலூகாவின் கிராமப் பஞ்சாயத்துகளின் முதல் மஹாநாடு நடைபெற்றது. மிஸ்டர்; ஏ. பி. ஷெட்டி எம். எல். ஸீ, அவர்கள் தலைமையை வஹித்தார். பஞ்சாயத்துகளின் சிலவுக்காக கவர்மெண்டார் நிலவரிவசூலிலிருந்து ரூபாய்க்கு ஒரு அணவீதம் அவைகளுக்கு பண உதவி செய்யவேண்டுமென்றும், அவ்வேற்பாடு நிமித்தம் சட்டமேற்படுகிறவரையில் ஜில்லாபோர்டார் புத்தூர்தாலூகாவிலுள்ள பஞ்சாயத்துகளின் சிலவிற்காக பிரதி வருஷத்திலும் 5000 ரூபாய்களைக் கொடுக்கவேண்டுமென்றும், பஞ்சாயத்துக் காடுகள் கிராமப்பஞ்சாயத்துகளிற்கு நிர்வாஹத்திற்கு ஒப்பிக்கப்பட வேண்டுமென்றும், பஞ்சாயத்து கோர்ட்டுகளும் கிராமப்பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்பிக்கப்பட வேண்டுமென்றும், பஞ்சாயத்துக்கோர்ட்களால் பினல் கோடின்படி விதிக்கப்படும் அபராதத்தொகைகளை பஞ்சாயத்துகள் அடையவேண்டுமென்றும், பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களிற்கு உபாத்தியாயர் ஒவ்வொருவருக்கு ரூபாய் 180 இலிருந்து 240 ரூபாய் வீழ்க்காடு பிரதிவருஷமும் கிராண்டுகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், பள்ளிக்கூடங்கள் வேண்டிய நாற்காலி பெஞ்சி, பீரோ முதலியசாமான்களை வாங்கிக் கொள்வதற்கு கிராண்டுகள் கொடுக்கப்படவேண்டு மென்றும், உபாத்தியாயர்களின் நிமித்தம் பிராவிடெண்டு பண்டுகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள அம்மஹாநாட்டில் கைக்கொள்ளப்பட்டன.

## மதராஸ் பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் (லிமிடெட்)

அடியில் கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதராஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நடந்த மார்ச்சுமீ முடிவுவரை அப்படிப் பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின் சங்கியை 355 எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த பங்குகள் 605.

### பங்கின் பொருப்புஒரே ரூபாய்தான்.

(ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அந்த அந்த பஞ்சாயத்தின் மெம்பர்களில் வரிசைக்கிறமமாய் ஷேர் எடுத்துக் கொண்டவர்களின் நெம்பர், பெயர், ஷேர் சங்கியை முதலியன.)

முன்சஞ்சிகைபடி கடைசி நெம்பர் 230
ஷை ஷை கூடுதல்ஷேர் 339

செங்கற்பட்டு ஜில்லா, முகரம்பாக்கத்தில் 231 ஏ. சிங்காரநாயடு 5; கொல்லானூரில் 232 எதிராஜ முதலியார் 5; கோயம்புத்தூர் ஜில்லா தளைவாய் பாளயத்தில் 233 எம். சுப்பிரமணிய முதலியார் 1, 234 ரங்கசுவாமி கவண்டர் 1, 235 R. முத்துசாமி கவண்டர் 1; செங்கற்பட்டு ஜில்லா சிருகுன்றத்தில் 236 S. M. சுப்பிராய முதலியார் 6; தென் ஆற்காடு கொழுந்திராம்பட்டில் 237 R. ஆரோக்கியசாமி முதலியார் 6; செங்கற்பட்டு ஜில்லா பாலவாக்கத்தில் 238 A. ராஜகோபால ரெட்டியார் 6, 239 A. காலப்ப ரெட்டி 1, 240 வேணுகோபால் ரெட்டி 1, 241 இராமஸ்வாமி பிள்ளை 1, 242 A. வெங்கு ரெட்டி 1, 243 V. ராமகிருஷ்ண ரெட்டி 2; செங்கற்பட்டு ஜில்லா பள்ளிக்குப்பத்தில் 244 சின்னசாமி ரெட்டி 14; சித்தூர் ஜில்லா வாயல்பாடில் 245 சிந்தவாகுண்த ரெட்டி 5; வட ஆற்காடு பாடாகத்தில் 246 குப்புசாமி அய்யர் 4; செங்கற்பட்டு ஜில்லா பாலவாக்கத்தில் 247 A இராஜகோபால ரெட்டி 8; குண்டூர் ஜில்லா (கோணங்கி) சீதாராம புரத்தில் 248 பொனயால சரயய்யா 6; வட ஆற்காடு இராயூரில் 249 S. ஈசுவர அய்யர் 13; குண்டூர் ஜில்லா (கோணங்கி) சீதா ராம புரத்தில் 250 ஓட்டல்ல சிதய்யா 6; வடஆற்காடு மேல புஞ்சையில் 251 R. முத்துசாமி உடையார் 6; தென் ஆற்காடு புரசை குருசியில் 252 M. கேசவய்யர் 5; தென் ஆற்காடு வரஞ்சரத்தில் 253 சட்டமுத்து உடையார் 5; தென் ஆற்காடு ஜில்லா மணக்கொல்லையில் 254 N. R. சுப்பராயலு ரெட்டியார் 10; குண்டூர் ஜில்லா கம்பம்பாடில் 255 ஆத்தூரு ரங்கய்யா 6, 256 வேல் காட்டி வெங்கய்யா 6; தென் ஆற்காடு உடையமாம்பட்டில் 257 கல்லதம்பி உடையார் 5; தென் ஆற்காடு கீழக்குருச்சியில் 258 புராகிங்கசேர்வை 5; செங்கற்பட்டு ஜில்லா புலம்பாக்கத்தில் 259 P. தனங்செய முதலியார் 1; செங்கற்பட்டு ஜில்லா கல்லாபிராபுரத்தில் 260 C S குமாரசாமிமுதலியார் 2; கோயம்புத்தூர் ஜில்லா தளவாய் பாளையத்தில் 261 ரங்கசாமிகவண்டர் 1; செங்கற்பட்டு ஜில்லாமணலியில் 262 நாதமுனிநாயுடு 5; சித்தூர் ஜில்லா பந்தலபள்ளியில் 263 பெத்தசித்தம் நாயுடு 4; வட ஆற்காடு படாகத்தில் 264 குப்புசாமி அய்யர் 2, 265 வெங்கடாசல அய்யர் 1, 266 முனிசாமி கவுண்டர் 1, 267 சுப்பாநாயுடு 1, 268 கிருஷ்டகவுண்டர் 1; செங்கற்பட்டு ஜில்லா கல்லாபிராமபுரத்தில் 269 லக்ஷ்மண முதலியார், 1 270 காத்தவராகவகிராமணி 1; தென் ஆற்காடு பின்னல்வாடியில் 271 துரைசாமி நாயுடு 1, 272 எரக்கோனன் 1, 273 பிள்ளையாரசு கவண்டன் 1, 274 முத்துகோனன் 1 275 கேசவகோனன் 1, 276 கோவிந்தசாமி நாயுடு 1, 277 வேலாயுத உடையார் 1; செங்கற்பட்டு ஜில்லா சந்தவேலூரில் 278 பெய்டாபால சுப்பிரமணிய ரெட்டி 2; குண்டூர் ஜில்லா சீமாகுர்த்தியில் 279 சங்கர வெங்கட சுப்பாரெட்டி 4, 280 கோடிபல்ராம ரெட்டிகாரு 2; தென் ஆற்காடு கப்சாவரத்தில் 281 எ. பொன்னுசாமி கவண்டர் 1; வட ஆற்காடு காரியமங்கலத்தில் 282 சக்கிரபாணி நாயுடு 1, 283 அப்பாவு நாயுடு, 1 284 வரதப்ப நாயுடு 1, 285 வரதப்பநாயுடு 1; வட ஆற்காடு தி. புதூரில் 286 மன்ன கவண்டர் 2, 287 அப்பாவு நாயுடு 2; வட ஆற்காடு ஜில்லா கொலநாவாடியில் 288

கிருஷ்ணசாமி நாயகர் 2, 289 பல்ராம நாயகர் 2, 290 பரசுராம பிள்ளை 2, 291 பொன்னு நாயகர் 2, 292 துரைசாமி நாயகர் 2; திருச்சி ஜில்லா நாகலாபுரத்தில் 293 S. P. சாம்பசிவ ரெட்டியார் 1, 294 முத்து வெங்கடாசல ரெட்டியார் 1, 295 C. வைத்தியனாத கவண்டர் 1; வட ஆற்காடு பூமானந்தலில் 296 குட்டியப்ப கோன் 1, 297 கோவிந்தசாமி ரெட்டி 1; வட ஆற்காடு கொட்டுபாக்கத்தில் 298 A. R. பார்த்தசாரதி கவண்டர் 1; திருச்சி ஜில்லா, நாராயண மங்கலத்தில் 299 முத்தப்பட உடையார் 1; 300 செங்கமல கவண்டர் 1, 301 மருதமுத்து மூப்பனர் 1, 302 சிதம்பர மூப்பனர் 1, 303 மருதை கவண்டர் 1; கோயம்புத்தூர் ஜில்லா ஆலம்பாளையத்தில் 304 T. கெம்பை கவண்டர் 8, 305 சின்ன ரெங்கநாயகர் 5; கோயம்புத்தூர் ஜில்லா தொப்பம் பாளையத்தில் 306 வரதப்பகவண்டர் 2; சித்தூர் ஜில்லா ர க சமுத்திரத்தில் 307 முனிடிராமய்ய ரெட்டி 1; தென் ஆற்காடு கிள்ளையில் 308 குமாரசாமி படையாச்சியார் 1, 309 கோவிந்தராஜ பிள்ளை 1, 310 ராகவாசாரியார் 1, 311 பொன்னுசாமி நாயுடு 1, 312 வரதராஜ பிள்ளை 1, 313 பால சுப்பிரமணிய பிள்ளை 1, 314 முத்துவேலு பிள்ளை 1, 315 பாவாடை பிள்ளை 1; தென் ஆற்காடு பாக்கம் என்கிற வட பொன்பரப்பியில் 316 S. இராமனுஜலு நாயடு 1, 317 ஷெயிக்மதார் சாகேப் 1, 318 சின்னசாமி கவண்டர் 1, 319 வெங்கிடராம கவண்டர் 1, 320 நாராயண நாயடு 1, 321 சின்னசாமி செட்டியார் 1, திருச்சி ஜில்லா சித்தம்பியில் 322 பெரியதம்பி உடையார் 1, சித்தூர்ஜில்லா மட்லிவாரி பள்ளியில் 323 முத்து சுப்பைய்ய ரெட்டி 1, 324 வெங்கிடேச ரெட்டி 1, 325 வள்ளிமுல்லா ரெட்டி 1, 326 மோலசித்தி ரெட்டி 1, 327 கோமூர் வீம ரெட்டி 1; செங்கற்பட்டு ஜில்லா சிருவாடாவில் 328 குமாரசாமி பிள்ளை 2, 329 செஞ்சி ஓபுல் ரெட்டி 1, 330 கொன்ன ராகவ ரெட்டி 1, 331 குப்பு செட்டி 1, 332 குப்புசாமி ரெட்டி 1, செங்கல்பட்டு ஜில்லா அகும்பாக்கத்தில் 333 வெங்கிடாசலபதி நாயடு 1, 334 T. சுப்பராயுலு செட்டி 1, 335 நயனியப்ப ரெட்டி 1, 336 நாணி கன்னியப்ப ரெட்டி 1, 337 N. செங்கல்வாராய ரெட்டி 1, 338 K. பாஷியம் செட்டி 1, 339 புட்டு முனிசாமி நாயுடு 1; தென் ஆற்காடு ஜில்லா கட்டளையில் 340 முத்து குமரப்ப ரெட்டி 2; செங்கற்பட்டு ஜில்லா மாமண்டூரில் 341 ஷெயிக் அப்துல்லா சாயபு 1; செங்கற்பட்டு ஜில்லா இடமச்சி என்ற பொற்பந்தலில் 342 P. A. துரைவேலு முதலியார் 1, 343 முத்துபிள்ளை 1, 344 T பார்த்தசாரதி பிள்ளை 1, 345 பழனிவேலு முதலியார் 1, 346 நடேச முதலியார் 1; அனந்தபுரம் ஜில்லா மடகசிராவில் 347 நஞ்சி நாய முனிகாரி நஞ்சப்பா 1, 348 இடசித்தப்பா 1, 349 கிம்மன பெட்டிகாரி கோவிந்தப்பா 1; 350 சின்ன மல்லய்யா 1, 351 தோட்ட நரசப்பா 1, 352 சொல்லாபள்ளி நாராயண சாஸ்திரி 1, 353 யதகோடண்ணு 1, 354 கனிவண்றி அவலப்பா 1, 355 T. சின்ன பாசிம்ஸா 1.

ஆக மார்ச்சுமாதம் முடிய பஞ்சாயத்தார்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஷேர்கள்...............605.

---

## "கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்.

சுக்கிலவருஷ சித்திரை மீ

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் 13 | சித்திரை 1 | ச | சது 24-49 | ரோ 45-41 | மேஷரவி 5-27. சௌரஸம்வத்ஸராதி, சூன்யதிதி. |
| 14 | 2 | ஞா | பஞ் 18-20 | மிரு 41-15 | ஷஷ்டி திதி |
| 15 | 3 | தி | ஷ 12-17 | ஆரு 37-18 | ஸப்தமி திதி, சுக்ரமூடமாரம் [பம் |
| 16 | 4 | செ | ஸப் 6-45 | புநர் 33-54 | |
| 17 | 5 | பு | அஷ் 1-53 நவ 57-47 | பூசு 31-13 | ஸ்ரீராம நவமி |
| 18 | 6 | வி | தச 54-31 | ஆயி 29-20 | கரிநாள் |
| 19 | 7 | வெ | ஏகா52-8 | மக 28-19 | ஸர்வைகாதசி ம. சி. |
| 20 | 8 | ச | துவ50-48 | பூர 28-20 | ரிஷபாயனம் 34-19 சி. உ. |
| 21 | 9 | ஞா | திர 50-32 | உத் 29-22 | பிரதோஷம் |
| 22 | 10 | தி | சது 51-27 | ஹஸ்31-31 | சி. பி. |
| 23 | 11 | செ | O 53-32 | சித் 34-50 | சித்திராபூர்ணமை |
| 24 | 12 | பு | பி 56-51 | ஸ்வா39-22 | |
| 25 | 13 | வி | துவி60-0 | விசா 44-58 | சுக்ரமூடநிவர்த்தி |
| 26 | 14 | வெ | துவி 1-16 | அநு 51-32 | |
| 27 | 15 | ச | திரி 6-38 | கே 58-49 | கரிநாள் |
| 28 | 16 | ஞா | சது 12-41 | மூல 60-0 | பஞ்சமிதிதி |
| 29 | 17 | தி | பஞ் 19-2 | மூல 6-23 | அதிதி சி. உ. |
| 30 | 18 | செ | ஷஷ் 25-7 | பூரா 13-50 | ஷஷ்டி திதி சி. பி. |
| மே 1 | 19 | பு | ஸப் 30-26 | உ.ரா 20-43 | குருமூடமாரம்பம். |
| 2 | 20 | வி | அஷ்34-28 | திரு 26-28 | |
| 3 | 21 | வெ | நவ 36-52 | அவி 30-42 | அக்னி நக்ஷத்திராரம்பம் |
| 4 | 22 | ச | தச 37-26 | சத 33-4 | அ. ம. |
| 5 | 23 | ஞா | ஏகா36-4 | பூட் 33-32 | ஸர்வைகாதசி |
| 6 | 24 | தி | துவ32-54 | உட் 32-13 | பிரதோஷம் |
| 7 | 25 | செ | திர 28-5 | ரே 29-17 | திரயோதசி திதி |
| 8 | 26 | பு | சது 21-42 | அசு 24-50 | திதித்வயம் ம. சி. [ணம் சி. ம |
| 9 | 27 | வி | அமா 14-35 | பர 19-27 | கிருத்திகாவிரதம் சூர்யகிரஹ |
| 10 | 28 | வெ | பிர 6-29 துவி 58-14 | கிரு 13-28 | சந்திரதர்சனம் சி. ம. |
| 11 | 29 | ச | திரி 50-0 | ரோ 7-13 | |
| 12 | 30 | ஞா | சது42-9 | மிரு 1-13 ஆயி 55-32 | சதுர்த்தி திதி [23 ஸ்ரீசங்கர ஜயந்தி. |
| 13 | 31 | தி | பஞ் 34-26 | புந 50-26 | பஞ்சமி திதி ரிஷபோரவி 58- |

சுபம்-அ-அமிருதம்; சி-சித்தம்; அசுபம் ம-மரணம்; உ-உத்பாத, பி-பிரலாப விஷ்டம் ஒன்றும் போடாத தினங்கள் சுப யோகங்களென அறியவும்.



# இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.


---


# அத்புத ஆருடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4 அணா அதிகம் வி. பி. வேறு. கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து:-இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர்த் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சகல தோஷங்களும் கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும் சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும். வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்.

பலாசூர் N. ராமநாத சாஸ்திரியார்
அடையாறு லைப்ரேரி பண்டிதர் மைலாப்பூர்—சென்னை


---


# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதாரர்களும் அட்வர்டிஸ்மெண்டு சட்டணங்களும் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்த்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டாரால் விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி மேற்படி தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி.
பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு
முகாம்:—பாலவாக்கம், ஊத்துக்கோட்டை போஸ்டு செங்கற்பட்டு


---


இனாம்! ரப்பர் முத்திரை இனாம்!!

நமது சக்ரவர்த்தி அவர்களால் நன்கு மதிக்கப் பெற்ற 14 காரட் கோல்ட் நிப்பு பதித்த பவுண்டன் பேனா வொரு காலைக்கு உழைக்கும், எல்லா காகிதத்திலும் நன்றாக எழுதும்.




இந்தபேனா வாங்குவோருக்கு அவர்களுடைய (முழு) விலாசத்துடன் (ரப்பர் முத்திரை) (இனாமாக) அனுப்பப்படும்.

விலை ரூ 2—10—0 கேட்லாக் இனாம்.

ஜீ. எஸ், அண்டு கோ
கோவிந்தப்ப நாயக்கன் வீதி, (மதராஸ்.)


179381


# SADHANA
# AUSADHALAYA
## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose**, M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சிவி

இது வீர்யக்குறைவை, ஆண்மைத்தன்மை, சுவப்னஸ்கலிதம், முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடிய வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5

# அம்ருதாஞ்ஜனம்

என்றாலென்ன ?

தலைநோய், பக்க நோய், இல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்




சுளுப்பு, மார்சளி,

உப்பசம், மார்புக்க,

கழுத்து சளி, ரத்தம் விழுதல்,

சந்திவாய்வு, சீழ் விழுதல்

கண்டு, சீலம், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துகள், படை,

சிரங்கு, தெளவு, எரிச்சல், இது

அது என்று சொல்வானேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும் ! போக்கும் !! போக்கும் !!!

மூன்று திசைகளிலும் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்.



Published by Mr. A. *Rajagopala Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd Madra

***Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS***

***CHINGLEPUT***